பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 10 வியாழக்கிழமை (23.04.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:148

# வன்னியில் தமிழர் கொலைகளை நிறுத்த இந்தியா வலியுறுத்து

## அவசர உயர் மட்டக் கூட்டத்தில் முடிவு

புதுடில்லி, ஏப்ரல் 23

வன்னியில் தமிழ்ப் பொதுமக்கள் படுகொலை செய்யப்படுவது நிறுத்தப்பட வேண்டும். அப்பாவித் தமிழர்கள் தொடர்ந்து கொலை செய்யப்படுவது குறித்து இந்தியா கவலை அடைகின்றது.

அதேவேளை பொதுமக்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்கும் காட்டுமிராண்டித்தனத்தை விடுதலைப் புலிகள் நிறுத்த வேண்டும்.

இவ்வாறு நேற்றிரவு புதுடில்லியில் நடைபெற்ற அரசாங்க உயர் மட்டத்தினரின் அவசர கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் தமிழ்ப் பொதுமக்கள் தொடர்ந்து கொலை செய்யப்படுவது குறித்து நாங்கள் மிகவும் மனவருத்தம் அடைகின்றோம். இந்தப் படுகொலைகள் கட்டாயம் நிறுத்தப்பட வேண்டும் - என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவசர கூட்டத்தின் பின்னர் தெரிவித்தார். (16 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை இன்று இல்லை

யாழ்ப்பாணம், ஏப்.23

காங்கேசன் - திருமலை பயணிகள் கப்பல் சேவை இன்று நடைபெறமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. திருகோணமலையில் இருந்து (16 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் அமைச்சர் இலங்கை வருவார்

கொழும்பு, ஏப்.23

பிரிட்டிஷ் நாட்டு அமைச்சர் ஒருவர் இந்த வார இறுதியில் இலங்கைக்கு விஜயம் மேற் கொள்வார் என அந்நாட்டுப் பிரதமர் கோர்டன் பிரௌன் நேற்றுத் தெரிவித்தார்.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கு (16 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயத்தில் மூன்றில் ஒரு பகுதி படையினர் வசம்; எட்டுக் கிலோமீற்றர் தூரமே புலிகளிடம் மிச்சமாக உள்ளது

### அமைச்சர் ரம்புக் வெல சொல்கின்றார்

கொழும்பு, ஏப்.23

பாதுகாப்பு வலயத்தில் மூன்றில் ஒரு பகுதியைப் படையினர் இப்போது கைப்பற்றியுள்ளனர் எனத் தேசிய பாதுகாப்புக்கான பேச்சாளரும் அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பு நிலைமை தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக் காலை தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நடைபெற்றபோதே (16 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே

8 ஆம் 9 ஆம் பக்கங்களில்

கல்விச்சுடர்

தரம் - 05 புலமைப்பரிசில் மாணவருக்கான தயார்படுத்தல் பரீட்சைத் தொடர்

## இலங்கை நிலைவரம் குறித்து அமெ. காங். சபையில் விவாதம்

நியூயோர்க், ஏப்.23

இலங்கையில் இடம்பெற்று வரும் யுத்த சூழ்நிலை மற்றும் மனிதாபிமான நிலைவரங்கள் தொடர்பில் அமெரிக்க காங்கிரஸ் சபையில் விவாதம் நடைபெற்றுள்ளது.

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் அப்பாவிச் சிவிலியன்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தவறியுள்ளனர் என்று விவாதத்தின் போது அமெரிக்க காங்கிரஸ் சபை உறுப்பினர் ஜிம் மெகுவரன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிறுவனம், செஞ்சிலுவை சர்வதேசக் குழு மற்றும் (16 ஆம் பக்கம் பார்க்க)

## புதுமாத்தளனில் இருந்து 356 பேர் திருமலைக்கு

கொழும்பு, ஏப்.23

புதுமாத்தளன் பகுதியில் இருந்து 356 பொதுமக்கள் நேற்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் திருகோணமலைக்கு (16 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசு மீது ஹிலாரி குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப்.23

இலங்கையில் விடுதலைப் புலிகளுடன் நடைபெறும் போரை முடிவுக்கு கொண்டு வரும் தனது முயற்சிகளின் காரணமாக பொதுமக்களுக்கு சொல்லொணா துயரங்களை இலங்கை அரசு ஏற்படுத்தியுள்ளது என அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்டன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இலங்கை அரசின் நடவடிக்கைகள் குறித்து முழு உலகமும் ஏமாற்றமடைந்துள்ளது எனவும் அவர் நேற்றுத் தெரிவித்தார். (16 ஆம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்பு வலயத்தில் நேற்று 324 பேர் பலி! பீரங்கித் தாக்குதல்களால் கப்பல் புறப்பட தாமதம்!!

கொழும்பு, ஏப்.23

அம்பலவன்பொக்கணை, வலைஞர் மடம் ஆகிய மக்கள் வாழ்விடங்கள் மீது படையினர் நேற்று புதன்கிழமை செறிவான ஆட்லெறி எறிகணை, கொத்துக்குண்டு எறிகணை, பீரங்கி மற்றும் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

அவற்றின் பேது 324 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 423 பேர் படுகாயமடைந்தனர் - என்று இணையத் தளத் தகவல்கள் தெரிவித்தன. நேற்றைய தாக்குதல் சம்பவங்கள் குறித்து இணைத் தளங்கள் வெளியிட்ட விவரங்கள் வருமாறு:

வலைஞர்மட தேவாலய வளாகத்தில் மட்டும் 6 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 10 பேர் படுகாயமடைந்துள்ளனர். பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதனும் அவர்களில் ஒருவராவார்.

மக்களின் நிலையான வீடுகள், இடம்பெயர்ந்த மக்களின் கூடாரங்கள் என்பன எரிந்து நாசமாகியுள்ளன. வலைஞர்மடத்தில் இயங்கிவந்த நட்டாங்கண்டல் மருத்துவமனை மிக மோசமாகச் சேதமடைந்துள்ளது.

இதேவேளையில் கடந்த இரு நாள்களில் சிறிலங்கா (16 ஆம் பக்கம் பார்க்க)

## தயா மாஸ்ரர், ஜோர்ஜ் ஆகியோர் இராணுவத்தினரிடம் சரண்

### படைத்தரப்புத் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.23

விடுதலைப்புலிகளின் ஊடக இணைப்பாளர் தயாமாஸ்டரும், முன்னாள் ஆரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வனின் மொழிபெயர்ப்பாளருமான ஜோர்ஜ் ஆகிய இருவரும் இராணுவத்தினரிடம் சரணடைந்திருக்கின்றனர் என இராணுவத் தலைமையகம் தெரவித்துள்ளது.

புதுமாத்தளன் பகுதியில் சிவிலியன்களுடன் வந்த இவர்கள் இருவரும் இராணுவத்தினரிடம்சரணடைந்தனர் எனவும் இராணுவத் (16 ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சி நலன்புரி நிலையங்களில் செவ்வாயன்று வந்தவர்களுடன் 10,000 பேர்

யாழ்ப்பாணம், ஏப்.23

தென்மராட்சி பிரதேச நலன்புரி நிலையங்களில் நேற்று புதன்கிழமை காலை வரை 10ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தங்கவைக்கப்பட்டுள்ளதாகப் புள்ளி விவரங்கள் மூலம் தெரியவருகிறது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அழைத்து வரப்பட்டவர்களில் நேற்று மாலை வரை ஆயிரத்து 325 பேர் பதிவு (16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் இருந்து வந்தோரில் 23 பேர் மந்திகை வைத்தியசாலையில் அனுமதி

யாழ்ப்பாணம், ஏப்.23

வன்னிப் பகுதியில் இருந்து அழைத்துவரப்பட்டவர்களில் காயமடைந்த நிலையில் இருந்த 23 பேர் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள் ளனர்.

அவர்களில் 2 சிறுவர்களும் 6 பெண்களும், 15 ஆண்களும் உள்ளடங்குவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இவர்களில் 6 பேர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். (அ-4)

## தமிழகத்தில் இன்று வேலைநிறுத்தம் இலங்கையில் போர்நிறுத்தத்தை வலியுறுத்தி

சென்னை, ஏப்.23

இலங்கையில் போர்நிறுத்தம் ஏற்பட மத்திய அரசை வற்புறுத்தி தமிழ்நாடு முழுவதும் இன்று வேலைநிறுத்தம் நடைபெறும் என்று முதலமைச்சர் கருணாநிதி அறிவித்துள்ளார்.

உடனே போர்நிறுத்தம் செய்யும்படி இலங்கை அரசுக்கு இறுதி எச்சரிக்கை விடுக்க வேண்டும் என்று கோரி பிரதமர் மன்மோகன்சிங், ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் தலைவர் சோனியா காந்தி, வெளியுறவுத்துறை (15 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஊரெழுவிலுள்ள இரு ஆலயங்களில் தீர்த்தம் வடியும் அதிசயம்

[illegible], ஏப்.23

ஊரெழு மேற்குப் பகுதியில் இரண்டு ஆலயங்களின் கோபுரம் மற்றும் விதானத்தில் இருந்து தீர்த்தம் வடியும் அதிசயம் நிகழ்ந்துள்ளது.

ஊரெழு மேற்கில் உள்ள சிவபூரணி காளியம்மன் ஆலயத்திலும், பொக்கணை முருகன் ஆலயத்திலுமே இவ்வாறு தீர்த்தம் வடியும் அதிசய நிகழ்வை அவதானிக்க முடிகின்றது.

காளியம்மன் ஆலயத்தின் வசந்த மண்டபத்தின் மேற்புறத்தில் இருந்து கடந்தவாரம் தீர்த்தத்துளிகள் விழத் தொடங்கின. இதைக் கண்ணுற்ற பக்தர்கள் பலர் அந்தத் தீர்த்தத் துளிகளை ஏந்தி அருந்தியபோது பலரின் நோய்கள் குணமாகியதாகத் தெரிவிக்கப்பட்டது.



இதேவேளை, காளியம்மன் கோயிலில் கடந்த செவ்வாய்க்கிழமை தீர்த்தம் வடிவது நின்று போனது எனினும் செவ்வாய்க்கிழமை முதல் காளியம்மன் ஆலயத்திற்கு அருகில் உள்ள பொக்கணை முருகன் ஆலயத்தின் கோபுரத்தில் இருந்து தீர்த்தம்வடியத் தொடங்கியுள்ளது.

இந்த அற்புதத்தை காணவும், தீர்த்தத்தை அருந்தித் தமது நோய்களைக் குணப்படுத்தவும் இந்த ஆலயத்திற்கு பலர் திரள்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

19 வருடங்களின் பின் ஊரெழு மேற்கு சிவபூரணி காளியம்மன் ஆலயத்தில் கும்பாபிஷேகம் நடக்கவிருக்கும் சமயத்தில் இவ்வாறு தீர்த்தம் வடியும் சம்பவம் நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-72)

## நாவாந்துறையில் நடமாடிய மாதா!

நாவாந்துறை வடக்கிலுள்ள சென்.மேரீஸ் பரலோக மாதா ஆலய வளாகதில் மாதா நடமாடியதை மூன்று சிறுமிகள் அவதானித்ததாக பரவிய தகவலால் நேற்று முன்தினம் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

மாதா கோயிலில் விளையாடிக் கொண்டிருந்த மூன்று சிறுமிகள் ஆலயத்தின் பிரதான மண்டபத்தில் மாதா நடமாடியதைக் கண்ணுற்று அதனை பிறருக்கு காட்ட முனைந்தபோது நடமாடிய மாதாவின் உருவம் திடீரென மறைந்தது எனவும் அதன் பின்னர் ஆலயத்தின் சீமெந்துத் தரையில் மாதாவின் கால் தடங்கள் பதிந்திருந்ததை அவதானிக்க முடிந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இச் சம்பவத்தை கேள்வியுற்ற பலர் மாதாவின் கால் தடங்களை தரிசிப்பதற்காக பெரும் அளவில் குறித்த ஆலயத்துக்கு வந்தவண்ணம் உள்ளனர். (4)

## சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியம் விசேட அறிவித்தல்

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தில் அங்கத்துவம் பெற்ற அனைத்து அந்தண குருமார்களுக்கான அங்கத்துவ அடையாள அட்டைகள் எதிர்வரும் 25ஆம், 26ஆம் திகதிகளில் காலை 9மணிதொடக்கம் குருகுலத் தலைமைக் காரியாலயத்தில் வழங்கப்படவிருப்பதால் தயவு செய்து சிரமம் பாராது வந்து பெற்றுக் கொள்ளவும்.

முத்திரை அளவு புகைப்படம் கொண்டுவருதல் வேண்டும். விரைவில் நடைபெறவிருக்கும் வேத ஆகம பரீட்சைக்கான பதிவுகளையும் மேற்கொள்ளலாம்.

வருகை தரும்போது 2009 ஆம் ஆண்டு அங்கத்துவத்தை உறுதிப் படுத்தும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்.

## கண்ணீர் அஞ்சலி

மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பீட கணனிப்பிரிவு இறுதியாண்டு மாணவனும் எமது நண்பனுமாகிய கோபாலகிருஷ்ணன் நிசாந்தனின் அன்புத் தாயார்



**திருமதி கோபாலகிருஷ்ணன் சித்திரகௌரி**

மரணமான செய்தி கேட்டு அதிர்ச்சி அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி

யாழ்.இந்துக் கல்லூரி மாணவர்கள்
(2004 உயர்தர பிரிவு).

## மரண அறிவித்தல்

### நடராஜா செல்வராஜன்

(அப்பர் அத்தான் - வட்டுக்கோட்டை)



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நடராஜா செல்வராஜன் 20.04.2009 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கந்தையா நடராஜா - செல்லம் தம்பதியினரின் மகனும் இராசமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராஜாவின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி குலநாயகம் தம்பதியினரின் அன்பு மருமகனும் செந்தூரன் (CIC Pvt Ltd, Colombo), சாரங்கன் (சிங்கப்பூர்), நிரோஷன் (யாழ்ப்பாணக் கல்லூரி), யாழீசன் (யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2009) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கரத்தை வீதி,
வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

## கலைப்பீட விரிவுரைகள் இன்று ஆரம்பம்

அரையாண்டு பருவ விடுமுறையைத் தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழக கலைப் பீட விரிவுரைகள் இன்று வியாழக்கிழமை முதல் மீண்டும் ஆரம்பமாக உள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## தலிபான்கள் வெறியேற மறுத்து விட்டனர்!

பாகிஸ்தானின் பர்னர் மாவட்டத்தில் தங்களால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியிலிருந்து வெளியேற தலிபான் தீவிரவாதிகள் மறுத்து விட்டனர். இதனால் அப்பகுதியில் வசித்து வந்த எம்.எல்.ஏக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் அங்கிருந்து வெளியேறிவிட்டனர்.

பாகிஸ்தானின் வட மேற்கு எல்லைப் புற மாநிலத்திலுள்ள ஸ்வாட் பகுதியில் செல்வாக்குச் செலுத்தி வந்த தலிபான் தீவிரவாதிகள், கடந்த 2 வாரங்களுக்கு முன்பு பர்னர் மாவட்டத்துக்குள் புகுந்து அதை ஆக்கிரமித்துக் கொண்டனர். அந்த மாவட்ட சுல்தான்வாஸ் கிராமத்திலுள்ள ஒரு வியாபாரியின் மாளிகையை கைப்பற்றி அதையே தங்கள் தலைமையகமாக அவர்கள் பயன் படுத்தி வருகிறார்கள்.

மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக உள்ளூர் நீதிபதியாக முப்தி பஷீர், அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார். தலிபான் தளபதி பதே முகமது, பர்னர் நகரில் அமர்ந்தவாறு அதிகாரம் செலுத்தி வருகிறார்.

## அல்-குவைதா தீவிரவாதிகள் துருக்கியில் கைது

துருக்கியின் மத்திய அன்டோலியா மாநிலத்திலுள்ள கோன்யா என்னுமிடத்தில் பதுங்கியிருந்த 15 அல்-குவைதா தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டார்கள். அவர்களிடமிருந்து துப்பாக்கிகள், தோட்டாக்கள், வெடிகுண்டுகள் ஆகியவையும் கைப்பற்றப்பட்டன.

கோன்யா பகுதியில் ஒசாமா பின்லேடனின் அல்-குவைதா தீவிரவாத அமைப்பின் தீவிரவாதிகள் பதுங்கியுள்ளார்கள் என பொலிஸ் வட்டாரத்துக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. இதையடுத்து, பொலிஸார் தீவிர தேடுதல் வேட்டையை மேற் கொண்டனர்.

இவ் வேட்டையின் போது 15 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டார்கள். அவர்களிடமிருந்து பெருவாரியான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. தப்பியோடி தலைமறைவான இதர தீவிரவாதிகளைக் கைது செய்வதற்கான வேட்டையில் பொலிஸார் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

## சமையல் ஆள்தேவை

யாழ்.நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சைவ உணவகத்திற்கு சமையல், ரொட்டி, அப்பம் தயாரிக்கக் கூடிய வேலையாள், ரீ மேக்கர் உடனடியாகத் தேவை.

தொடர்பு:- 195, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## கோழிக்குஞ்சு விநியோகம்

PIRIMA சிவப்பு, வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகள் 27.04.2009 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

★ [illegible]
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா அருளம்பலம் (சின்னமணி)

புதுறோட், காரைநகரைப் பிறப்பிடமாகவும் 2ஆம் குறுக்குத்தெரு, வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா அருளம்பலம் 21.04.2009 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் நகுலேஸ்வரி, சாரதாதேவி, புஸ்பராணி, காலஞ்சென்ற கருணாகரன் (கண்ணன்), மனோகரஞ்சிதம் (கொழும்பு), விக்கினேஸ்வரன் (கட்டார்) ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், மகாலிங்கம், பாலசிங்கம், நடராசா, புவனேஸ்வரி, கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரரும் பரமானந்தம், சிவராசா, சுகந்தினி, பவானந்தன், சொர்ணரூபி ஆகியோரின் மாமனாரும் கிருபானந்தன், சிவதர்சினி, சிவகரன், சிவரூபி, ஜென்சி, பவித்திரன், ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (23.04.2009) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆ.கணேசன்,
வேதரடைப்பு,
காரைநகர்.

தகவல்:-
விக்கினேஸ்வரன் (மகன்).

### திருமதி கோபால கிருஷ்ணன் சித்திரகௌரி



யாழ்ப்பாணம், கொட்டடியைப் பிறப்பிடமாகவும் மீசாலையை வசிப்பிடமாகவும் தற்போது இராஜ வீதி, [illegible]டில் வசித்து வந்தவருமாகிய கோபாலகிருஷ்ணன் சித்திரகௌரி (பரணி பாலர் பாடசாலை ஆசிரியை) நேற்று (22.04.2009) புதன்கிழமை மாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற Dr. வேலுப்பிள்ளை, அரியரத்தினத்தின் பெறாமகளும் காலஞ்சென்ற வாரித்தம்பி மற்றும் ஞானகலாவல்லி தம்பதிகளின் மருமகளும் கோபாலகிருஷ்ணனின் (இளைப்பாறிய ப.நோ.கூ.சங்க முகாமையாளர் - துணுக்காய்) பாசமிகு மனைவியும் நிஷாந்தன் (மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல்பீட இறுதிவருட மாணவர்), தர்சிகா (வவுனியா வளாகம் முதலாம் வருட - ICT மாணவி), சுகந்தன் (2009 உயர்தரப்பிரிவு மாணவன், கொக்குவில் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும் உருத்திரா (பிரான்ஸ்), சியாமளகௌரி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2009) வியாழக்கிழமை மீசாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 4.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கொற்புலவு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"பரணி இல்லம்"
கொடிகாமம் வடக்கு,
கொடிகாமம்.

தகவல்:
கணவர்.

### திருமதி வேலுப்பிள்ளை நாகரத்தினம்



நல்லூர், யமுனா வீதியைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நாகரத்தினம் நேற்று (22.04.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - நாகம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் சிவராசா, பஞ்சாட்சரம், பரமானந்தன் (ஜேர்மனி), காலஞ்சென்ற அருளானந்தம் மற்றும் இராசம்மா (ஜேர்மனி), பரமேஸ்வரி (இந்தியா), யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகராசா (ஜேர்மனி), சிறிரங்கநாதன் (கனடா), சுலோசனாதேவி, சுசீலாதேவி, கிருஸ்ணமூர்த்தி (பிரான்ஸ்), விமலாதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் யமுனா (ஜேர்மனி), பாலேஸ்வரி (கனடா), விஸ்வநாதன், சாந்தினிதேவி (பிரான்ஸ்), பாலச்சந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜேர்மனியில் வசிப்பவர்களான திலீபன், மிருசா, விமல்சன், நிதர்சன், கபிலன், கனடாவில் வசிப்பவர்களான அபிராமி, சிவகாமி, கோதை, கோப்பாயில் வசிப்பவர்களான பிரியதர்சினி, ஆனந்தரூபி, நாகரஞ்சினி, பிரான்சில் வசிப்பவர்களான கோபிநாத், டயானா, டனுசா, லண்டனில் வசிப்பவர்களான பிரவிந்தன், கஜேந்திரன், அபிசாத், அஜித் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2009) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இருபாலை [illegible] மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பேத்தி அம்மன் கோயிலடி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

தகவல்:
திருமதி நாதன் சுசீலா (மகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## புதுக்குடியிருப்பில் இறுதிச் சமர்....
## ஐ.சி.ஆர்.சி. அதிகாரியின் எச்சரிக்கை

பாதுகாப்பு வலயத்தில் மூன்றில் ஒரு பகுதியைப் பாதுகாப்புப் படையினர் கைப்பற்றி விட்டனர் என்ற தகவல் இப்பத்தியை எழுத ஆரம்பித்தபோது கிடைத்தது. பாதுகாப்புக்கான பேச்சாளரும் அமைச்சருமான கெறகலிய ரம்புக்வெல இத்தகவலை வெளியிட்டிருந்தார். மொத்தத்தில் எட்டுக் கிலோமீற்றர் தூரமுள்ள நிலப்பரப்பு மட்டுமே புலிகளிடம் எஞ்சியுள்ளது என்றும் அவர் எடுத்துக் கூறினார்.

இதேவேளை, எஞ்சியுள்ள தனது போராளிகளுடன் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் சரணடையாவிட்டால், சில மணித்தியாலங்களில் தனது தலைவிதியைச் சந்திக்க நேரிடும் என்று (அதாவது நேற்று முன்தினம் நண்பகல் 12 மணிக்கு முன்னர் சரணடையாவிட்டால்) இராணுவத் தளபதி முன்னேற்பாடாகவே கூறிவிட்டார்.

எவ்வாறெனினும், எந்தச் சந்தர்ப்பத்திலும் எந்தக் காரணம் கொண்டும் தாம் ஒருபோதும் சரண் அடையப்போவதில்லை என்று விடுதலைப் புலிகள் அறிவித்துவிட்டனர்.

இவற்றிலிருந்து எவரும் ஊகிக்கக்கூடியது, அனுமானிக்கக் கூடியது என்னவெனில், புதுக்குடியிருப்பில் அரசாங்கம் பிரகடனப்படுத்திய பாதுகாப்பு வலயத்தில் இறுதிச் சமர் ஒன்று நடைபெறுவதற்கான சாத்தியம் 99 சதவீதம் உண்டு என்பதே ஆகும்.

அத்தகைய பெருஞ்சமர் நடைபெறுமாயின், அது பெரும் கோர நிகழ்வாக, மிகப்பெரும் மனிதப் பேரவலமாக உருவாகி துரதிர்ஷ்டமான விளைவுகளைத் தரும் என்று எச்சரித்திருக்கின்றார் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் செயற்பாட்டு இயக்குநர் பயர்றி ஹரகன்புஹி.

மனிதாபிமானச் செயற்பாடுகளில் ஈடுபட்டு, அவர்களது உயிருக்கும் உடலுக்கும் ஆபத்து ஏற்படும் வேளைகளில் பாதிப்புறும் மக்களுக்கு மிகுந்த மனித நேயத்துடன் இதயசுத்தியுடன் அப்பழுக்கில்லாமல் அரும்பணி ஆற்றுவதில் உலகளாவிய ரீதியில் மதிப்பும் கௌரவமும் பெற்றது செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு (ஐ.சி.ஆர்.சி). உலகின் எந்தப் பிரதேசத்திலும், ஆபத்து நிறைந்த போர்ப் பிரதேசங்களிலும் மக்களுக்குரிய பலவகையான மனிதாபிமானத் தொண்டுகளை மனந்தளராது ஆற்றிவரும் பெருமை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கு உண்டு. அந்த அமைப்பின் உயரதிகாரியான பயர்றி ஹரகன்புஹி, தமது இயக்கத்துக்கு தனித்துவமாக உள்ள மனிதாபிமானம் நிறைந்த மனதுடன், முல்லைத்தீவில் நிகழக்கூடிய மனிதப் பேரவலத்தை மிகுந்த கவலையுடன் பார்க்கிறார். அவரது மனிதநேயம் இரண்டு தரப்புக்களுக்குமான அறிவுறுத்தலாக மட்டுமின்றி, உலகில் மிகப் பெறுமதியான மனித உயிர்கள் அழிந்துவிடக்கூடாது, பேரவலத்தை அனுபவிக்கக் கூடாது என்ற இரக்க சிந்தையுடனான எச்சரிக்கையாக அமைகிறது.

போரில் ஈடுபட்டுள்ள தரப்புகள் தாம் திட்டமிட்ட அல்லது நிர்ணயித்த இலக்குகளை நோக்கித் தீவிரமாகச்செயற்படும் என்பதால், இந்த உச்சக்கட்ட வேளையில் அவை யார் சொல்வதையும் காதில் போட்டுக்கொள்ளா என்பதனை ஜெனிவாவில் இருந்தாலும் நேரில் கண்டுகொள்ளக்கூடிய ஆற்றல் உள்ளதாலேயே இறுதிச் சமரை நிறுத்துங்கள் என்று நேரடியாகக் கூறாமல் அது நடைபெற்றால் விளைவு எத்துணை பேரழிவைக்கொண்டுவரும் என்று தமது அனுபவத்தில் இருந்து எடுத்துக் கூறியுள்ளார் - எச்சரித்துள்ளார்-பயர்றி.

ஏனைய நாடுகளின் ஆலோசனை, கோரிக்கை என்பன இலங்கை அரசின் காதில் ஏறாது என்பதை அறிந்துகொண்டதால் போலும் இறுதிச் சமரை நிறுத்த வேண்டும் என்று மறைமுகமாக, பூடகமாக - சொற்களின் அடுக்கு வரிசையில் - எடுத்துக் கூறிவிட்டு பாதுகாப்பு வலயத்தில் உயிரழிவை இயன்றளவு குறைப்பதற்கு விசேட முன்னெச்சரிக்கை தேவையென்று நேரடியாக இடித்துரைத்திருக்கிறார்.

பொதுமக்கள் தஞ்சம் கோரிச் சென்ற குறிப்பிட்ட பாதுகாப்புப் பகுதி, பொதுமக்களால் நிரம்பி வழிகிறது. இந்த நிலைமை ஒரு பேராபத்தான கோர நிகழ்வு என்ற நிலையில் எந்த விதத்திலும் குறைந்ததல்ல. அங்கு நடைபெறும் யுத்தத்தினால் நூற்றுக் கணக்கான மக்கள் இறந்தொழிந்துவிட்டனர். வைத்திய வசதி கிடைக்காத நிலையில் காயமுற்றவர்கள் அவஸ்தைப் படுகின்றார்கள். அதனாலேயே அரசாங்கப் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெறக்கூடிய இறுதிச் சமர் குறித்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளது. அத்தகைய சமர் நடைபெறும் பட்சத்தில் பொதுமக்கள் இறப்பதும் காயமடைவதும் மிகமிக அதிரடியாக உயரும் என்று எடுத்துக் கூறியுள்ளார்.

ஆகையால் பொதுமக்கள் மத்தியில் உயிரிழப்புக்களையும் காயமுறுதலையும் மேலும் உண்டாக்கக்கூடிய இறுதிப் போரைத் தவிர்க்குமாறு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு இரு தரப்புக் களையும் எச்சரிக்கிறது என்று பேரவலத்தை ஆழ்ந்து அகன்று விவரித்திருக்கிறார்.

அதாவது இறுதிச் சமர் நடைபெற்றால் பொதுமக்களின் உயிர் இழப்பும் காயமுறுதலும் நினைத்துப் பார்க்க முடியாதவாறு திடீரென பெருமெண்ணிக்கையில் உயருமென்று அவர் எச்சரித்திருக்கிறார்.

அதனைக் கருத்திற்கொண்டு இறுதிச் சமர் தவிர்க்கப்படும் என்பதற்கான அறிகுறி எதுவும் அதிசயமாகத் தானும் தோன்றும் என்று எதிர்பார்க்க முடியவில்லையே! யார் உணர்வார் இறைவா கச்சி ஏகம்பனே ...!

## மோதல்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை வெளியேற்ற பிரான்ஸ் - பிரிட்டன் திட்டம்

லண்டன்,ஏப்.23

இலங்கையில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான மோதல்களில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவும் வகையில் பிரான்ஸும் பிரித்தானியாவும் இணைந்து அவர்களை வெளியேற்றும் யோசனை ஒன்றை நேற்று அறிவித்துள்ளன.

தாம் புதிய முயற்சி ஒன்றில் ஈடுபட்டுள்ளதுடன் இது குறித்து பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் டேவிட் மிலிபாண்டுடன் கலந்துரையாடி வருவதாக பிரான்ஸ் வெளி விவகார அமைச்சர் பேர்னாட் கொவூச்னர் வானொலி செவ்வியொன்றில் தெரிவித்துள்ளார்.

மோதல்கள் இடம்பெறும் பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற படகுகளை வழங்க உள்ளதாகவும் மக்கள் கரையோரங்களில் சிக்கியிருப்பதாகவும், அவர்கள் கடலில் மூழ்கக்கூடிய நிலைமை காணப்படுவதாலேயே ஆபத்தை உணர்ந்து தாம் இந்த யோசனையை ஆரம்ப கட்டத்திலேயே முன்மொழிந்துள்ளதாகவும் பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளார்.

அதிகளவான நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் துரதிஷ்டவசமாக மக்கள் கொஞ்சம் களைப்படைந்துள்ளனர். அங்கு இராணுவ ரீதியிலான தலையீடுகளை மேற்கொள்ளும் திட்டமில்லை. அவ்வாறான நிலைப்பாட்டில் தாம் இல்லை எனவும் பேர்னாட் கொவூச்னர் கூறியுள்ளார்.

இதேவேளை ஆபத்தான நிலையில் 65 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கரையோரப் பகுதியில் தற்காலிக கூடாரங்களில் தங்கியுள்ளதாக அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (50)

## மீட்கப்பட்ட மக்களின் நலன்களைக் கவனிக்க அரசு விசேட குழுக்களை அமைத்துள்ளது

வவுனியா,ஏப்.23

அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு வந்துள்ள பெரும் திரளான மக்களின் நலன்புரி விடயங்களைக் கண்காணிக்கவென பல விசேட குழுக்கள் அப்பிரதேசங்களுக்கு அனுப்ப வைக்கப்பட்டுள்ளதெனவும் அந்த மக்களை தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் பூர்த்தி செய்துள்ளதெனவும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் எம். எஸ். எஸ். அமீர் அலி தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நேரடி கண்காணிப்பன் கீழ் இந்த மக்களுக்குத் தேவையான சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ள அதேசமயம், மருத்துவ நிபுணர்கள், மின்சார சபை அதிகாரிகள் அடங்கிய இரண்டு விசேட குழுக்கள் நேற்று முன்தினம் உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் வந்துள்ள மக்களின் நிலைமைகளை விசேடமாக அவதானிக்கவென ஜனாதிபதி செயலக அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று நேற்று முன்தினமும் சென்றதுடன், அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சின் செயலாளர் தலைமையிலான மற்றுமொரு குழு நேற்று முன்தினம் சென்றுள்ளது. இன்னுமொரு குழு செல்லவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பட்டார்.

மீட்டெடுக்கப்பட்ட மக்களை நிவாரணக் கிராமங்களுக்கு அனுப்ப வைக்கவென மேலதிகமாக 154 பஸ் வண்டிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. சுமார் 58 ஆயிரம் மக்களுக்குத் தேவையான சகல வசதிகளும் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளதுடன் 6700 கூடாரங்களும் தயாரான நிலையில் வைக்கப்பட்டுள்ளன. (50)

## ஞானச்சுடர் வெளியீடு நாளை

வடமராட்சி,ஏப்.23

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ சபைப் பண்பாட்டுப் பேரவை மாதந்தோறும் வெளியிட்டு வரும் 'ஞானச்சுடர்' ஆன்மீகச் சஞ்சிகையின் சித்திரை மாத இதழ் வெளியீட்டுவிழா நாளை வெள்ளிக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பேரவைத் தலைவர் கே.அருள்லிங்கம் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறும் இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை டாக்டர் கா.பாலகிருஸ்ணனும், மதிப்பீட்டுரையை இளைப்பாறிய அதிபர் திருமதி தவமலர் சுரேந்திரநாதனும் நிகழ்த்துவார்கள். (50-236)

## பழைய பாடத்திட்ட பரீட்சை முடிவுகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம்,ஏப்.23

கடந்த வருடம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையின் பழைய பாடத்திட்ட பரீட்சார்த்திகளின் முடிவுகள் யாழ்ப்பாணத்துக்கு விமானத்தின் மூலம் வந்து சேர்ந்துள்ளன.

பாடசாலைகள் இன்று வியாழக் கிழமை தத்தமது வலயங்களில் இருந்து இந்தப் பெறுபேற்றினைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளும் அவரவர் முகவரிக்குக் கிடைக்கும் என கூறப்பட்டுள்ளது. (50-204)

## மருந்துகளை எடுத்து வருவதில் காலதாமதம்; போதனா வைத்தியசாலையில் நோயாளர் அவதி

யாழ்ப்பாணம்,ஏப்.23

யாழ். போதனா வைத்தியசாலையில் பெரும்பாலான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது. மருந்துகளை எடுத்து வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாலேயே இந்தத் தட்டுப்பாடு நிலவுவதாகக் கூறப்பட்டது.

மருந்துத் தட்டுப்பாடுகள் நிலவுவதால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

சலரோகம்,தொய்வு,தோல் நோய், எனப் பல்வேறு நோய்களுக்குரிய மருந்துகளுக்கே தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக்கு நேற்று நேரில் சென்று பார்த்தபோது நோயாளர்களுக்கு கொப்பியில் எழுதப்பட்ட மருந்துகளில் அநேகமானவற்றை வெளியிலே பெற்றுக்கொள்ளுமாறு மருந்துக்கலவையாளர்கள் நோயாளர்களுக்கு அறிவுறுத்தியதை அவதானிக்க முடிந்தது.

மருந்துத் தட்டுப்பாடு தொடர்பாக யாழ்.போதனா வைத்தியசாலையின் அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது -

கொழும்பிலிருந்து மருந்துகளை எடுத்து வரப்படுவதில் கால தாமதம் ஏற்படுவதாலேயே தட்டுப்பாடு நிலவுவதாகத் அவர் தெரிவித்தார்.

பெரும்பாலும் அடுத்தவாரமளவில் கொழும்பிலிருந்து மருந்து வகைகள் எடுத்துவரப்படும் என்றும் அவர் கூறினார். (50-9-224)

## உலக புத்தகதின இலக்கிய விழா

சுன்னாகம்,ஏப்.23

வலி.தெற்கு பிரதேச சபையின் உலக புத்தக தின இலக்கிய விழா இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்குச் சபையின் செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக மூதறிஞர் சிற்பி சிவசரவணபவன் கலந்து கொள்வார். இந் நிகழ்வில் தமிழ்ச்சுடர் விருது வழங்கிக் கௌரவிக்கப்படும் பிரதேச எழுத்தாளர்கள் ஒன்பது பேர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வர்.

இந் நிகழ்வில் அறிமுகவுரையினை நூலக ஆலோசனைக் குழு உறுப்பினர் சு.ஸ்ரீகுமரனும், 'கலைச் செல்வி சஞ்சிகையின் இலக்கியப் பங்களிப்பு' என்ற தலைப்பிலான ஆய்வுரையினை மல்லாகம் மகா வித்தியாலய ஆசிரியர் சி.ரமேசும் நிகழ்த்துவர்.

வெள்ளிமலை சஞ்சிகையின் 6 ஆவது இதழும் இந்நிகழ்வில் வெளியிட்டு வைக்கப்படும். (50-38-111)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 11 | 24.04.2009<br>வெள்ளிக்கிழமை |
| திதி: | சதுர்த்தசி<br>மு.ப. 10.40 வரை |
| நட்சத்திரம்: | ரேவதி<br>பி.ப. 01.49 வரை |
| சுபநேரம்: | 06.00 - 07.30 |
| ராகுகாலம்: | 10.30 - 12.00 |

## 'ஸ்மாட் காட்' சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான நடைமுறைகளில் மாற்றம்

அச்சுவேலி, ஏப்.23

புதிய சாரதி அனுமதிப்பத்திரம் (Smart Card) பெறுவதற்காக அறிமுகப் படுத்தப்பட்டிருந்த புதிய நடைமுறையில் மேலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள மோட்டார் திணைக்களம் அறிவித்துள்ளது.

அந்த மாற்றங்களின் விவரங்கள் வருமாறு:-

*புதிய கடவுச்சீட்டுக்குப் பயன் படுத்தப்படும் 3.5cm x 4.5 cm அளவிலான வர்ணப் புகைப்படப் பிரதிகளே ஏற்றுக்கொள்ளப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டது. ஆனால் தற்போது கறுப்பு, வெள்ளைநிற 3.5cm x 4.5 cm அளவிலான 03 புகைப்படப் பிரதிகள் விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

*கனரகமில்லாத வாகனங்களுக்கான (Light vehicle) சாரதி அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பதிவு செய்யப்பட்ட ஆர்.எம்.ஓ.அல்லது எம்.பி.பி.எஸ். மருத்துவர்களிடமிருந்தும் மருத்துவ அத்தாட்சிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம். அதில் குருதியின் வகை மருத்துவரால் உறுதிப்படுத்தல் அவசியமாகும். குருதியின் வகை குறிப்பிடாது சமர்ப்பிக்கப்படும் மருத்துவச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

புதிய சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் மேற்குறித்த அறிவுறுத்தலுக்கமைவாகச் செயற்படுவதுடன் மாதிரி விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பூர்த்தி செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

புதிய விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் அதனைச் சமர்ப்பித்து மாதிரி விண்ணப்பப் படிவத்தை இன்று வியாழக்கிழமை முதல் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (50-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பீட கணனிப்பிரிவு
இறுதியாண்டு மாணவனும் எமது நண்பனுமாகிய
கோபாலகிருஷ்ணன் நிசாந்தனின் அன்புத் தாயார்

### திருமதி கோபாலகிருஷ்ணன் சித்திரகௌரி

மரணமான செய்தி கேட்டு அதிர்ச்சி அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி

இறுதியாண்டு மாணவர்கள்,
பொறியியல் பீடம், மொறட்டுவ பல்கலைக்கழகம்.

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.மாவட்டச் செயலக புனர்வாழ்வு
புனரமைப்பு செயலகத்தில்
கணக்காளராகக் கடமையாற்றும்
ச.குகதாஸ் அவர்களின் தந்தை

### குமாரவேலு சண்முகநாதன்

அவர்கள் 21.09.2009 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டுத் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திட்டப்பணிப்பாளரும் அலுவலர்களும்,
புனர்வாழ்வு, புனரமைப்புச் செயலகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பகுதிக் கிராம அலுவலர் (J/327)

**கனகரத்தினம் சுபாஸ்சந்திரபோஸ்**

அவர்களின் அன்புத் தாயார் வள்ளிப்பிள்ளை கனகரத்தினம் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கொடிகாமம் மத்தி (J/327)
கிராம அபிவிருத்திச் சங்கம். (C/55816)

## ௯0ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அன்னை மடியில்:
24★05★1992

ஆண்டவன் அடியில்
23★01★2009

### செல்வன் இரத்தினம் சஜீவன்

பசுமையாய் இன்றுவரை நினைவுகள் கனக்குதையா!
பக்குவமாய் அழைக்கும் குரல் பரவசமாக்குதையா!
அமைதியாய் சென்று நீங்கள் ஆண்டவனை அடைந்தீர்கள்
ஆறாத்துயரில் நாங்கள் அலைகின்றோம்.
சோகத்தின் விழிப்பில் நின்று துவளுகின்றோம் நாம் எல்லோரும்
உங்கள் ஆத்ம சாந்திக்காய் சப்பச்சி பிள்ளையாரை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கடந்த 23.01.2009 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (23.04.2009) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

இரத்தினம்,
"துவாரகை"
தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர். (C/558166)

## கோழிக்குஞ்சு விநியோகம்

**BAHIRA புறொயிலர் குஞ்சுகள் இன்று மாலை விநியோகிக்கப்படும். 23.04.2009 பதிவுகளை மேற்கொள்ளவும்.**

- ★ ராஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
- ★ P.ரவி, சாவகச்சேரி.
- ★ சிற்றி பாம் றேடர்ஸ், கல்வியங்காடு.
- ★ மதுரா, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
- ★ கோல்டன் பாம், பருத்தித்துறை.
- ★ திருமகள் களஞ்சியம், சிவலிங்கப்புளியடி.

## 'ஒதெல்லோ' திரைப்படக் காட்சி

யாழ்ப்பாணம்,ஏப்.23

உலகப் புகழ்பெற்ற ஆங்கில நாடக ஆசிரியரான ஷேக்ஸ்பியரின் 'ஒதெல்லோ' திரைப்படம் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.பொது நூலக மண்டபத்தில் திரையிடப்படவுள்ளது.

ஆர்வலர்களைக் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (50)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

நல்லூர், ஏப்.23

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 11 இல் தகவல் தொழில்நுட்பப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர் செயலமர்வு நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வு எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் நான்கு நாள்களுக்கு வடமராட்சி வலயக்கல்வி அலுவலக கணனிவள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

## அமைதி-ஆனந்தம் வேண்டி பிரார்த்தனை வழிபாடு

யாழ்ப்பாணம், ஏப்.23

திருநெல்வேலி பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நேற்று புதன்கிழமை தொடக்கம் நாட்டில் அமைதி - ஆனந்தம் வேண்டிப் பிரார்த்தனை வழிபாடு நடைபெற்று வருகின்றது. தொடர்ந்து ஏழு நாள்கள் நடைபெறும் இந்தப் பிரார்த்தனை தினமும் பி.ப. 4.30 மணிக்கு ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

## பருத்தித்துறை - யாழ். மினிபஸ் சேவை அதிகரிப்பு

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான மினிபஸ் சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

போதிய ரயர், ரியூப் போன்ற உபகரணங்கள் இன்மையால் பருத்தித்துறை இ.போ.ச. பிரிவினால் நடத்தப்படும் பஸ் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதையடுத்து, பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்திற்குச் சென்று வரும் பயணிகள் நலன்கருதி மினிபஸ் சேவைகள் அதிகரிக் கப்பட்டுள்ளதாக சங்கத்தலைவர் இ.நவம் தெரிவித்தார்.

பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி, வல்வெட்டித்துறை ஆகிய இடங்கள் ஊடாக (750, 751 பாதைகளில்) முன்னர் 36 சேவைகள் இடம்பெற்றன. தற்போது இச்சேவைகள் 47 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதென அவர் மேலும் தெரிவித்தார்.(50-236)

## களுவாஞ்சிக்குடியில் நேற்று கல்வி நிலையம் தீக்கிரை!

மட்டக்களப்பு, ஏப்.23

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடியில் இலவசக் கல்வி நிலையம் ஒன்று தீக்கிரை யாக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் தமிழ் மாணவர்களுக்கு இலவசமாக கல்வி வழங்கும் இந்தக் கற்கை நிலையத்தை இனந் தெரியாத ஆயுததாரிகள் தீக்கிரையாக்கியுள்ளனர்.

நேற்று அதிகாலை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இத்தாக்குதலை நடத்தினர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயுததாரிகள் கற்கை நிலையத்தின் தளபாடங்களையும் அடித்து நொறுக்கியுள்ளனர் எனவும் கூறப்படுகிறது.

சம்பவம் குறித்து களுவாஞ்சிக்குடிப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (சி)

## முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சிக் கருத்தரங்கு

நல்லூர், ஏப்.23

வடக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிறுவனத்தின் அட்டவணைப்படுத்தப்படாத உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நெறிகள் யாழ்.நாவலர் மண்டபத்தில் நேற்று புதன்கிழமை முதல் ஆரம்பமாகியது.

இப் பயிற்சிக் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை வரை இடம்பெறும். இப் பயிற்சி நெறியில் தினமும் 200 க்கும் அதிகமான பயிற்சியாளர்கள் கலந்து கொள்கின்றனர். (50-111)

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் குமாரவேலு சண்முகநாதன்

(முன்னாள் அதிபர், யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்)

வையம் புகழும் பெருமகனாய்
வாழ்ந்து மறைந்த பேராளன்
செய்யும் தொழிலில் எம்பள்ளி
முன்னாள் அதிபர் ஆனவராம்
தெய்வ மைந்தர் தமை மீந்து
தெளிந்த வாழ்வைக் காட்டியவர்
ஐயன் சண்முகநாதனார்
அடைக முத்தி அவனருளே.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், நீர்வேலி.

## கண்ணீர் அஞ்சலி



வலி. கிழக்கு பிரதேச சபைச் செயலாளர்
த. நடராஜா அவர்களின்
அன்பு மாமனார்

### குமாரவேலு சண்முகநாதன்

(ஓய்வுபெற்ற அதிபர்)

அவர்கள் காலமானதையிட்டு ஆழ்ந்த துயரடைகிறோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புத்தூர். வலிகிழக்கு பிரதேசசபைச் சமூகம்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
27.05.1956

மறைவு:
24.03.2009

### அமரர் அப்பாத்துரை ஸ்ரீரங்கநாதன்

நிலையில்லா இவ்வுலகில்
நிலைத்துவிட்ட உன் அன்பால்
யாவருக்கும் இனியவராய் வாழ்ந்து
எம்மை விட்டுப் பிரிந்து சென்றாலும்
நினைவிழக்க முடியாமல் கண்ணீர்க்கடலில் நீந்துகின்றோம்.

உடுப்பிட்டி.

ஏ.கருணைவேல் குடும்பத்தினர்
அருண்சோ மில் உரிமையாளர்

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

### எப்படித்தான் மறப்பதோ



தோற்றம்: 03.08.1931
மறைவு: 26.04.2006

### நாகலிங்கம் பரஞ்சோதி

(உப்புக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்)
(திதி : சதுர்த்தசி)

எத்தனை உறவிருந்தும் சொல்லியழ யாருமில்லை
ஏற்புடன் சொந்தமென வாய்த்தவரும் நீங்களையா!
தத்துவம் பலசொல்லி தகைமையுடன் நாமிருக்க
தந்துநின்ற சொத்தும் சுகமும் கண்முன்னே!
எத்துணை இருந்தீரே ஒருவராய் நின்றீரே
ஏக்கங்கள் எதுவுமின்றி துணிவோடு வாழ்ந்தோமே
இத்தரை மீதினிலே இனியொரு துணையுமின்றி
எப்படித்தான் வாழுவதோ! எப்படித்தான் மறப்பதோ!

பறிஜின் டிசைன் குறூப்,
இல.100, அம்மன் வீதி,
திருநெல்வேலி.

மனைவி, மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.
நர்மதா, மிதுன் பரிசித், நர்மதா, மேருஜன் பரதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சிப் பிரதேச வைத்தியசாலைகளில் அத்தியாவசிய மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு

## இடம்பெயர்ந்து வரும் நோயாளர்கள் அனுமதிக்கப்படுவதால்

யாழ்ப்பாணம்,ஏப்.23

தென்மராட்சிப் பிரதேச வைத்தியசாலைகளில் அத்தியாவசிய மருந்து வகைகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் தினமும் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் வெளிநோயாளர் பிரிவிலும் சுமார் 75க்கு மேற்பட்டோர் விடுதிகளில் தங்கவைக்கப்பட்டும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த முதலாம் திகதி முதல் 20ஆம் திகதி வரையான 20 நாள்களில் 46 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் வெளிநோயாளர் பிரிவிலும் ஆயிரத்து 500க்கு மேற்பட்டோர் விடுதிகளிலும் சிகிச்சை பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்நிலையில் வைத்தியசாலை மருந்துக் களஞ்சியத்தில் மருந்துகள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் அத்தியாவசியமான மருந்து வகைகளைத் தனியார் மருந்தகங்களில் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுவதாகவும் நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆண்கள், பெண்கள், சிறுவர் விடுதிகளில் மொத்தம் 50 கட்டில்கள் உள்ளபோதிலும் 300க்கும் மேற்பட்டோர் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் மிதிவண்டி பாதுகாப்பு நிலையம், அம்புலன்ஸ் பாதுகாப்பு அறை, நோயாளர் தங்குமிடம் போன்ற இடங்களில் இரவுகளைக் கழிப்பதாகவும் பகல்வேளையில் மரநிழலில் தங்கியிருப்பதாகவும் நோயாளர்கள் தெரிவித்தனர்.

வைத்தியசாலை வளாகத்தில் அரைகுறை கட்டடங்களாகக் காணப்படும் விடுதிகளைத் துரித கதியில் பூர்த்திசெய்தால் விடுதி நோயாளர்கள் பயன்பெறுவர் என நலன்விரும்பியொருவர் தெரிவித்தார்.

இதேவேளை -

சர்வதேச நிவாரணம் மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (International Relief & Development) 30 லட்சம் ரூபா செலவில் வைத்தியசாலையின் விடுதி ஒன்றினை நிர்மாணித்து வருகின்றது. இந்த விடுதிக்கான கட்டில்கள், மெத்தைகள், அலுமாரி போன்றவை கொண்டுவரப்பட்டுள்ளன. (50-207)

# கைதடி, நாவற்குழி நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மாணவர்கள் கல்வி கற்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.23

கைதடி, நாவற்குழி பகுதிகளில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மாணவர்களுக்கு அடுத்த வாரம் கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிக்க வலயக் கல்வி அலுவலகத்தினால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கென கைதடி மத்திய மருந்தகத்திற்கு அருகிலுள்ள அரச காணியில் 'யுனிசெப்' நிறுவனத்தினரால் தற்காலிக வகுப்பறைகள் அமைக்கப்படவுள்ளன.

நலன்புரி நிலையங்களில் தரம் 1 தொடக்கம் 11 வரை 600க்குமேற்பட்ட மாணவர்கள் தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யுனிசெப் நிறுவனத்தினரால் ஏற்கனவே கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட வகுப்பறைத் தொகுதிகளில் மிருசுவில், கொடிகாமம் ஆகிய நலன்புரி நிலைய மாணவர்கள் கல்வி கற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (50-207)

## மிருசுவில் றோ.க.த.க. இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.23

மிருசுவில் றோ.க.த.க. பாடசாலையின் கல்விச் செயற்பாடுகள் இன்று வியாழக் கிழமை ஆரம்பமாகவுள்ளதால் பாடசாலையின் சகல ஆசிரியர்களையும் மாணவர்களையும் இன்று காலை பாடசாலைக்குச் சமுகமளிக்குமாறு அதிபர் எவ்.தோமஸ் எடிசன் அறிவித்துள்ளார்.

## சாவகச்சேரி டிறிபேர்க் ஆசிரியர், மாணவர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம்,ஏப்.23

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் தரம் 11இல் கல்வி கற்கும் மாணவர்களையும் கற்பிக்கின்ற ஆசிரியர்களையும் நாளை வெள் ளிக்கிழமை காலை 8 மணியளவில் கல்லூரிக்குச் சமுகமளிக்குமாறு கல்லூரியின் அதிபர் அறிவித்துள்ளார். (50-9)

# மாவட்ட எல்லே போட்டிகள் நாளை மறுதினம் நடைபெறும்

வலி.வடக்கு,ஏப்.23

யாழ்.மாவட்ட செயலக விளையாட்டு பிரிவு வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்தும் ஆண்களுக்கான எல்லே விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் 25ஆம் திகதி சனிக்கிழமை காலை 8மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும்.

போட்டிகளில் மோதவுள்ள பிரதேச செயலகங்களின் அணி விவரங்கள் வருமாறு:

* கரவெட்டி எதிர் நல்லூர் .
* தெல்லிப்பழை எதிர் சண்டிலிப்பாய்
* சங்கானை எதிர் காரைநகர்
* உடுவில் எதிர் யாழ்ப்பாணம்
* சாவகச்சேரி எதிர் ஊர்காவற்றுறை
* மருதங்கேணி எதிர் பருத்தித்துறை
* நெடுந்தீவு எதிர் வேலணை

கோப்பாய் பிரதேச செயலகம் இரண்டாம் சுற்றில் இருந்து விளையாடவுள்ளது. (86)

# ஜி.சீ.ஈ (சாதாரண) பரீட்சையில் மேலும் சில பாடசாலை முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.23

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ (சாதாரண) தரப் பரீட்சை முடிவுகளை மேலும் சில பாடசாலை அதிபர்கள் "உதயனுக்கு" அனுப்பிவைத்துள்ளனர்.

அந்த முடிவுகள் வருமாறு:

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி

*தமிழ் மொழி மூலம்*

த.துவாரகன் - 9ஏ, செ.வர்மிலா - 8ஏபி, மு.ஜமீலா 7ஏ2சி, ச.சுகன்யா - 6ஏ2பிசி, இ.விதுசன் - 5ஏ4பி, மு.கௌதமன் - 4ஏ3பிசிஎஸ், க.சிவச்சந்திரன் - 4ஏ2பி2சி, ப.தியானன் - 4ஏ2பி2சி.

*ஆங்கில மொழி மூலம்*

ஈ.ரஞ்சனி - 8ஏபி, இ.ஆர்த்தி - 4ஏ2பி3சி, இ.பிருந்தா - 3ஏ3பி3எஸ்.

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

செல்வராசா அனுதர்ஷா - 9ஏ, பத்மநாதன் மயூரி - 9ஏ, நந்தகுமார் நிரோசா - 7ஏ2பி, ஜெயக்குமார் திவ்யா - 7ஏ2பி, சிவபாலன் ஆராதனா - 6ஏபிசி, பாலச்சந்திரன் தேனுவதனி - 6ஏ3பி, சுந்தரம் தரணிகா - 6ஏ2பிசி, குணசிங்கம் பிரியங்கா - 5ஏ4பி, மகேஸ்வரராஜா சிந்துஜா - 5ஏ3பிசி, விக்கினேஸ்வரராஜா அமிர்தப்பிரியா - 5ஏ3பிசி, மகேஸ்வரராசா நிரோஜா - 5ஏ2பி2சி, முருகானந்தன் ஜதுனந்தா - 5ஏ2பி2சி, குகதாசன் அபர்ணா - 5ஏ2பிசிஎஸ், சிவராசா சிந்துஜா - 5ஏபி2சிஎஸ், பாலச்சந்திரன் பாலகௌரி - 4ஏ2பி2சி, சிவப்பிரகாசம் நிருஜா - 4ஏ4பிஎஸ், தர்மலிங்கம் திருமகிழினி - 4ஏ2பி2சிஎஸ், சிவஞானசுந்தரம் சர்மிளா - 4ஏ3பிசிஎஸ், சின்னத்துரை தர்சிகா - 4ஏ3பிசிஎஸ், கணேசலிங்கம் நிவேதா - 4ஏ4பிசி, சந்திரகுமார் துவாரகா - 4ஏ2பி2சிஎஸ்.

சென்.ஜோன்ஸ் கல்லூரி

*ஆங்கிலமொழி மூலம்*

ஆனந்தராசா சஞ்சயன் - 9ஏ, சூசைதாஸ் அலெக்ஸ்டியன் - 8ஏசி, சிவானந்தன் ஜனகன் - 7ஏபிசி, யூட்செல்வகுமார் நிலோஷன் - 7ஏபிசி, யூலியஸ் மரியதாஸ் கப்ஸ்ரன் றொஷான் - 6ஏ3பி, செல்வரஞ்சன் ஜிதும்ஷன் - 6ஏ2பிசி, கந்தசாமி வருணன் - 6ஏ2பிசி, வடிவேல் நிருஷன் - 6ஏ2பிஎஸ், மதியமுதன் ஜோன்பிரியந் - 5ஏ4பி, ஜெயபாலசிங்கம் ஜீபேஷ் - 5ஏ2பி2சி, ரவிட்ரன் பிரகதீஸ்வர் - 4ஏ4பிசி, நடராஜா தர்மீகன் - 4ஏ4பிஎஸ், மகாலிங்கம் நிறோஷன் - 4ஏ3பி2சி, புஸ்பரத்தினம் அபிகரன் - 4ஏ3பிசிஎஸ், கதிர்காமதம்பி முகுந்தன் - 4ஏ2பி3சி, பிரபாகரன் பிரசாந் - 4ஏ2பிசி2எஸ்.

*தமிழ்மொழி மூலம்*

அருள்தாசன் அருள்நாதன் - 7ஏ2பி, தெய்வேந்திரம் துஷ்யந் - 6ஏ2பிசி, யோகரஞ்சன் கார்த்திக் - 6ஏ2பிசி, சிங்கராஜா டுக்ஷன் - 5ஏ4பி, கனகரத்தினம் கோபிஷன் - 5ஏ4பி, பரமானந்தம் பாலரூபன் - 5ஏ2பிசிஎஸ், சிவபாலன் சிவராம் - 5ஏ2பிசிஎஸ், செல்வராஜா நாவண்ணன் - 4ஏ4பிசி, பாஸ்கரன் தீபிகன்- 4ஏ3பிசிஎஸ், சிவசுப்பிரமணியம் ஜனகன் - 4ஏ2பி3சி, மாணிக்கராஜா தனோஷன் - 4ஏ2பி3சி, சத்தியநாதன் கோபிதன் - 4ஏ2பி2சிஎஸ், கௌரிபாலன் ஞானயோகன் - 4ஏ2பி2சிஎஸ், செல்வரத்தினம் நதீஷன் - 4ஏ2பி2சிஎஸ், பகீரதன் கோகுலன் - 4ஏ3சி2எஸ். (9-253)

## புத்தக தின விழா

யாழ்ப்பாணம்,ஏப்.23

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் உலக புத்தக தின விழா இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு வட்டுக்கோட்டை பொதுநூலகத்தில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் எஸ்.புத்திசிகாமணி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலரும், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தருமான ம.ஞானவேல்ராஜா கலந்துகொள்வார்.

நிகழ்வில் நூல்கள் கண்காட்சியும் அன்றைய இன்றைய தகவல் தொடர்பாடல் சார்பான பெட்டகக் கண்காட்சியும் நடைபெறவுள்ளதால் நூலக வாசகர்கள், பாடசாலை மாணவர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரை கலந்து பயன்பெறுமாறு வலி. மேற்குப் பிரதேச சபையினர் அறிவித்துள்ளனர். (201)

## வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.23

ஐ.ஐ.எஸ். நிறுவனத்தில் தொழில் நிர்வாகத்தில் முதுமாணிக் கற்கைநெறி (MBA) தொடர்பான வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணியளவில் இல.200, சிவன்பண்ணை வீதியில் அமைந்துள்ள ஐ.ஐ.எஸ். சிற்றி கம்பஸ் பிரதான மண்டபத்தில் நிறுவன இயக்குநர் கு.விக்னேஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி கற்கைநெறி தொடர்பாக ஆர்வமுடையோர் கலந்துகொள்ளுமாறு நிறுவன இயக்குநர் அறிவித்துள்ளார். (50-9)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## மருந்து வகைகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.23

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை விடுதிகளில் தங்கியுள்ள நலன்புரி நிலைய நோயாளர்களுக்கு வழங்கவென மட்டுவில் வடக்கைச் சேர்ந்த தர்மலிங்கம் என்பவர் ஒரு தொகுதி மருந்து வகைகளை வைத்தியசாலை நிர்வாகத்திடம் ஒப்படைத்துள்ளார். (50-207)

## புதுவருட தினத்தன்று மதுபானம் விற்றவர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம்,ஏப்.23

புதுவருட தினத்தன்று மதுபானம் விற்பனை செய்த நபர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இச்சம்பவம் கடந்த 14ஆம் திகதி சாவகச்சேரியில் இடம்பெற்றது.

புதுவருடத்தன்றும் அதற்கு முதல் நாளும் மதுபானங்கள் விற்பனை செய்யக் கூடாது என்ற அரசின் அறிவிப்பை உதாசீனம் செய்யும் வகையில், கடை திறந்து மதுபானம் விற்பனை செய்த நபரை பொலிஸார் கைதுசெய்து நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

இந்நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (4-207)



பனை அபிவிருத்திச் சபை கொட்டடி சனசமூக நிலையத்தில் நடத்திய பனம்பொருள்கள் அபிவிருத்திக் கண்காட்சியில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

பனை அபிவிருத்திச் சபையின் கணக்காளர் வீ.பி.தேவராஜா மங்கள விளக்கேற்றுவதை முதல் படத்திலும், சுவிஸ் நாட்டின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான முகவர் அமைப்பின் பிரதிநிதி ஹான்ஸ் பீற்றர் எஸ்ரர் கண்காட்சியைத் திறந்துவைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

கொட்டடி சனசமூக நிலையத் தலைவர் இரா.செல்வவடிவேல் உரையாற்றுவதை மூன்றாவது படத்திலும், கண்காட்சியில் இடம்பெற்ற கைப்பணிப் பொருள்களை இறுதிப் படத்திலும் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்பள்ளி விளையாட்டு விழா

தொண்டைமானாறு கலைவாணி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை 25ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு சி.தியாகலிங்கம் தலைமையில் கலைவாணி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வல்வெட்டித்துறை நகர சபை செயலாளர் கு.அமிர்தலிங்கம் கலந்துகொள்வார். (50-86)

## மரண அறிவித்தல்

### திருமதி கபிரியேல் செல்லாச்சி



மண்டைதீவு, முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி கபிரியேல் செல்லாச்சி 19.04.2009 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமர் - கனகம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வைத்தி கபிரியேலின் அன்பு மனைவியும் இருதயமலர் (புஷ்பம்), றோசலின் (இன்பம்), யேசுதாசன், மரியதாசன், சூசைதாசன் (பிரான்ஸ்), மேரிதிரேசா (பவளம் - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான சின்னம்மா, பாக்கியம், பூரணம், வேலுப்பிள்ளை, செல்லம்மா, மங்களம், சின்னையா, சுபத்திரை ஆகியோரின் உடன்பிறந்த சகோதரியும் கற்பநாயகம், செல்லையா, மரிஸ்ரெலா, ஜெசி (கலா), ரஞ்சினி எலிசபெத் (பிரான்ஸ்), அன்ரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும் கனிஸ்டா, ஜஸ்ரின் (விஜி), கஸ்ரொன், கலிஸ்ரா, செல்வறோஜி, ஒபீக்கா (சுவிஸ்), ஹொட்பிறீ சுகத் (அல்ஹோபார்), ரதீக்கா, ஜெனிஸ்ரன், ஜெனீபா, றெறன்ஸ், ஜெறன்ஸ் (மலேசியா), ஜெறோம், ஜெனா, குணா, பியூலா, சொலன்நதியா (பிரான்ஸ்), ஹெவன் (பிரான்ஸ்), ஒலிவியா (பிரான்ஸ்), ஒஸ்கர் (பிரான்ஸ்), ஆகியோரின் பேர்த்தியும் ஜெபா, ஜெகத், றெபேக்கா, றொசிக்கா, கிருஷாந்தன், லக்ஷிகா, மொபினா, ஜானுகா, ஜாக்கின், எஸ்ரோன், ஜெஸ்மி, ஒஸ்னிசெரோன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'மலர் வாசம்'
கரணவாய் கிழக்கு, கரவெட்டி.
தொ.பே. 077 9649078

தகவல்:
நா.மு.கற்பநாயகம் (மருமகன்).

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
10
11
1920



மறைவு
23
03
2009

### அமரர் இரங்கநாதன் நடராசா

பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த எங்கள் தெய்வமே. எங்களை விட்டு விண்ணுலகு சென்று எத்தனை நாள்கள் கடந்த பின்பும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டு என்றும் நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தம்பளாவத்தை
அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

குடும்பத்தினர். (84653)

## காணி விற்பனைக்குண்டு

சுன்னாகம் சந்தை வீதியில் அமைந்துள்ள கிணற்றுடன் கூடிய (உடுவில் வயலிற்கு அருகில்) 2½ பரப்புக் காணியும், கோப்பாய் தெற்கு இருபாலை யில் அமைந்துள்ள (பிரதான வீதி, தபால் கந்தோருக்கு அருகில்) 3/4 பரப்புக் காணியும் விற்பனைக் குண்டு.

தொடர்புக்கு: 021 222 8820
077 248 7717 (84645)

## மரண அறிவித்தல்



### பொன்னாச்சிப்பிள்ளை செல்லத்துரை (சின்னக்கிளி)

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னாச்சிப்பிள்ளை செல்லத்துரை 18.04.2009 சனிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் செல்லத்துரை (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களாகிய செல்லையா, நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராமாசிப்பிள்ளை, செல்லம்மா, இலகுப்பிள்ளை, காலஞ்சென்ற வேதநாயகம், ஆறுமுகம், இராமலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி நாகேஸ்வரி பரமலிங்கம், சத்தியமூர்த்தி, காலஞ்சென்ற காந்தமூர்த்தி, மகேஸ்வரி, குருமூர்த்தி, இராஜேஸ்வரி, புவனேஸ்வரி, நகுலேஸ்வரி, பரமேஸ்வரி, சாந்தமூர்த்தி, (யாழ் இந்துக் கல்லூரி, யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவர்கள்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற பரமலிங்கம், பாலபத்மா, லலிதா, பூலோகநாதன், அமிர்தா; தியாகராஜா, சிவராஜா, கணேசமூர்த்தி, பாலேந்திரா, கீதலதா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.04.2009) வியாழக்கிழமை காலை 9 மணியிலிருந்து கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப. 3 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி நாகேஸ்வரி பரமலிங்கம் (மகள்)
No: 37, Vivekananda Road,
Colombo - 06
T.P: 2360893, 2362737

## விரிவுரைகள் இன்று ஆரம்பம்

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட, இராமநாதன் நுண்கலைப்பீட மாணவர்களுக்கான கல்வியாண்டு 2007/2008 முதலாம் அரையாண்டு குறுகியகால விடுமுறைகள் இன்றுடன் முடிவடைந்துள்ளது.

விரிவுரைகள் யாவும் இன்று வியாழக்கிழமையிலிருந்து ஆரம்பமாகின்றது என்பதை பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார். (50-9)

## மரண அறிவித்தல்

### திருமதி சோமசுந்தரம் வேதநாயகி

(இரத்தினம் அக்கா)

கடந்த 21.04.2009ஆம் திகதி பக்கம் 2இல் பிரசுரமான மரண அறிவித்தல் விளம்பரத்தில் பிரியாங்கனி என்னும் பெயரை மாலா என திருத்தி வாசிக்கவும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (84647)

தகவல்:
சோ.சோமஸ்கந்தராஜா (மகன்)

## 2ஆம் ஆண்டு நினைவு நாள்



### நாகலிங்கம் தர்மகுலசிங்கம்

(குணம்-பிரபல வர்த்தகர்)

தோற்றம் 13.06.1959 — மறைவு 29.04.2007

ஆண்டுகள் ஓடி மறையலாம்
நெஞ்சை விட்டு அகலாது
உம் நினைவுகள்
ஆத்மா சாந்தியடைய அரியங்காட்டு
விநாயகன் தாள் பணிகின்றோம்.

மந்துவில் மேற்கு
கொடிகாமம் (84630)

மனைவி,
பிள்ளைகள்.

## மூன்றாம் மாத நினைவலைகள்

மண்ணதனில்
23
08
1963



விண்ணதனில்
27
01
2009

### அமரர் பசுபதி விநாயகமூர்த்தி

(கிராம அலுவலர்)

அன்பெனும் ஏணி கொண்டு அனைவரையும் ஏற்றி வைத்து
உன்பணி ஏற்றதென்று உவகையோடதனைச் செய்து
பாருளோர் போற்ற வாழ்ந்து பாதியிலெம்மை பரிதவிக்க விட்டு
பறந்ததேன் ஐயா நீங்கள் நாளுமே நீளும் கண்ணீரினால்
நாமும் அஞ்சலிப்போம் என்றும்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (23.04.2009) வியாழக்கிழமை காலை 8 மணிக்கு புங்குடுதீவு கண்ணகை அம்மன் தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 25.04.2009 சனிக்கிழமை அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் இந்நிகழ்வுகளில் கலந்து அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

2ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (84650)

குடும்பத்தினர்.

## ஓராண்டு நீங்கா நினைவலையில்...



### அமரர் கந்தையா செல்லையா

மண்ணில் 11.11.1926 — விண்ணில் 04.05.2008

திதி: சித்திரை அபரபட்ஷ சதுர்த்தசி (23.04.2009)

சொல்லால் செயலால்
வெல்லாத உலகையெல்லாம்
வென்றெடுத்த எம் தந்தையே!
செல்லாத உலகிற்கு சென்று
ஆண்டுதான் ஒன்றானதோ
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுடனே நாமிருப்போம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

அன்னாரின் ஓராண்டு நினைவஞ்சலியிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

சித்தம்பாதி,
கரணவாய். (சி/558151)

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


## ஆண்டு விழாவும் விளையாட்டு நிகழ்வும்

வலி.வடக்கு,ஏப்.23

புன்னாலைக் கட்டுவன் கலைவாணி சனசமூக நிலையத்தின் 26ஆவது ஆண்டு விழாவும் கலைவாணி முன்பள்ளி மழலைகளின்விளையாட்டு நிகழ்வும் நாளை வெள்ளிக்கிழமை 24ஆம் திகதி பி.ப. 1 மணிக்கு சனசமூக நிலைய முன்றலில் இ.செல்வறஞ்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலாளர் திருமதி சதீசன் மஞ்சுளாதேவியும், துணை விருந்தினராக சுன்னாகம் பிரதேசசபை செயலாளர் திருமதி க.சொக்கலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளார்கள். (50-86)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் அப்பாத்துரை ஸ்ரீரங்கநாதன்

தோற்றம்: 27.05.1956 — மறைவு: 24.03.2009

கடந்த 24.03.2009 அன்று இறைபதம் அடைந்த எமது குலவிளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (23.04.2009) வியாழக்கிழமை காலை 6 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இக்கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(தயவுசெய்து இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்).

இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி. (84628)


குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்ட விவசாயிகளிடையே மூலிகைப் பயிர்ச் செய்கையை அறிமுகப்படுத்தல்

## கொடிய நோய்களையும் தீர்க்கும் வல்லமை நமது பிரதேச மூலிகைகளுக்கு இருக்கிறது

இன்றைய யாழ்ப்பாணச் சமூகம், தன்னிச்சையாகவே தனது மூல வளங்களைக் கொண்டு அன்றாட தேவையைப் பூர்த்தி செய்வதில் பழக்கப்பட்டதென்பது நாமனைவரும் அறிந்ததே. அந்த வகையில் இங்கு விவசாயம் தன்னிறைவு பெற்ற நிலையிலேயே காணப்படுகிறது. எத்தனை இடர்பாடுகளிருப்பினும், எமக்கு வேண்டிய உணவு எம்மத்தியுள்ள விவசாயப் பெருமக்களி



னால் பெருமளவில் உருவாக்கப்பட்டு போதுமான வரையில் அதனைப் பயன்படுத்தியே வாழ்கிறோம்.

அந்தவகையில் எமது அன்றாட தேவைகளிலொன்றான, மருத்துவத் தேவையை அதிலும் சித்தமருத்துவம் சார்ந்த சேவையை நல்க, தேவையான சித்தமருந்துகள் இன்று நம்மிடையே இல்லை என்றே கூறலாம். இப்போதைய சூழ்நிலையில், நாம் எமது சித்த மருந்துகளைப் பெறுவதற்கென ஆயுர்வேத மருந்துக்கூட்டுத்தாபனத்தையே (Srilanka Ayurvedie Drugs Corporation) முழுமையாக நம்பியிருப்பது மன வருத்தத்திற்குரிய ஒன்றாகும். எனவே இந்நிலை மாறவேண்டும் என்றால் எம்மத்தியில் ஒரு தரமான சித்த மருந்து செய்நிலையம் உருவாக்கப்படவேண்டும். இம்மருந்து செய்நிலையத்திற்கான பல்வேறு மட்ட வேலைகள் பல்வேறு தரப்பில் இருந்தும் மிக மெதுவாக



நடைபெறுகின்றன என்றாலும், மூலிகை விநியோகம் தொடர்பான விடயம் நிச்சயிக்கப்படவேண்டும். எது எப்படியாயிருப்பினும், சித்தமருந்து செய்நிலையத்தினதும், சித்தமருந்துகளினதும் மூலப்பொருள் அல்லது மூலவளம் - மூலிகைகளே. எனவே சித்தமருந்து செய்நிலையம் அமைக்க முன், மூலிகைப் பயிர்ச்செய்கை விரிவுபடுத்தப்படவேண்டியது அவசியம். இம்மூலிகைகள் பல யாழ். மாவட்டத்தில் விரிந்து பரந்து கிடக்கின்றன என்பது கண் கூடான உண்மை.

எமது மருத்துவக் கற்கையின் கள நிலைக்கற்கைகளே (Field work study) யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பட்ட பிரதேசங்களில் காணப்படும் மூலிகைகளின் பட்டியல், அவற்றின் பரம்பல்கள் என்பன ஆய்வுசெய்யப்பட்டுள்ளன. இவை இன்னும் நிறையவே ஆய்வு செய்ய வேண்டியிருக்கின்றன. இப்பரம்பலின் படியே அப்பிரதேச விவசாயிகள் அங்கு மூலிகைப் பயிர்செய்கையை மேற்கொண்டு, சித்தமருந்துகளின் மூலப்பொருள்களை தொடர்ந்து வழங்கும் நிலை நிச்சயிக்கப்படின், இங்கு சித்தமருந்து செய்நிலையம் ஒன்றினை இயக்கச் செய்து சித்தமருந்துகளை தொடர்ந்து உற்பத்திசெய்யக் கூடிய நிலையை ஏற்படுத்தமுடியும். இதற்காக விவசாயிகளுடன் நாமும் ஒன்றுபட வேண்டும்.

சித்தமருந்துகளைச் செய்ய, மூலிகைகளின் உலர்சரக்குகளும், உலராத (பச்சையான) சரக்குகளும் (Fresh remedies) தேவை. இன்று யாழ்.மாவட்டத்திலுள்ள தமிழ் மருந்துக் கடைகளில் உள் சரக்குகள் மட்டுமே உள்ளன. அதிலும் அவை பெருமளவிலோ அல்லது சிலசரக்குகள் தரமானவையாகவோ கிடைப்பதில்லை. எனவே இவற்றை தவிர்க்கவே, மூலிகை பயிர்ச்செய்கையை இங்கு அறிமுகப்படுத்தி உறுதிப்படுத்த வேண்டும்.

உதாரணமாக நன்னாரி ( Hemidesmus indicus) என்னும் மூலிகை தாவரத்தின் வேரையே மருந்துக்கு பயன்படுத்துகின்றோம். இது, எமது யாழ். மாவட்டத்தில் பொதுவாக அனைத்து பிரதேசங்களிலும் கிடைக்கின்ற மூலிகையாகும். இம்மூலிகை தற்போது நாவின்ன தேசிய ஆராய்ச்சி நிலையத்தினால் நடாத்தப்பட்ட மருத்துவ ஆராய்ச்சிகளின் பெறுபேறாக, புற்றுநோய் எதிர்ப்புமூலிகைகளில் ஒன்றாக வெளியிட்டுள்ளமை தெரிந்ததே. இம்மூலிகையின் வேரிற்கு இரத்தத்தை சுத்தி செய்யும் தன்மை ( Blood purifier) உண்டு. இதனை இன்றும் எம்மக்கள் தேநீர் பொடியாகவும் பயன்படுத்துகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



இப்படியான தாவரங்கள் எம்மிடையே உள்ள விவசாயிகளால் பயிரிடப்பட்டால், அதன்வேரை உரியமுறையில் சேகரித்து அதை தமிழ் மருந்துக் கடைகளுக்கும், சித்தமருந்து செய்நிலையத்திற்கும் வழங்கிவரின், இதனைப் பயன்படுத்தும் யாழ். சமூகம் நல்ல ஆரோக்கியத்தையும், பயிர்ச்செய்கையையும் மேற்கொண்டு அதனை விற்பனை செய்து எமது விவசாயிகள் பொருளாதாரத்தையும் ஈட்டிக் கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்தின் மூலிகைப் பரம்பல் செறிவிற்கு நாம் வேறு நாடுகளுக்கு கூடஏற்றுமதி செய்து அந்நிய செலாவணியைப் பெருக்கிக் கொள்ளலாம். உதாரணமாக; இந்திய அரசினால் பிரசுரிக்கப்பட்ட அரிய மூலிகைகளில்,

பெரியநங்கை ( Polygala elongala) செம்மணலி (Erythronylon monogynum) முட்டநாறி (Acronychia pedunculata) போன்ற பல மூலிகைகள் யாழ். மண்ணில் பலஇடங்களில் செழிப்பாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இருப்பினும், இன்றைய நிலையில் முதலில் எம்மத்தியில் இம் மூலிகை பயிர்ச்செய்கையை மேற்கொண்டு சித்த மருத்துவதேவையை பூர்த்தி செய்து, நாமும் பயனடைவோமாக. தமிழ் மருத்துவக் கலையான சித்தமருத்துவக் கலைக்கு உரம் சேர்ப்பது தமிழர் ஒவ்வொருவரினதும் தனியான தலை மேல் கடமையாகும்.

யாழ். மாவட்டத்தில்;

நாயன்மார்கட்டு, நெடுந்தீவு- கார்போகவளசி (Psoralea corylifolia Linn)

கோகிலாக்கண்டி: சிவனார் வேம்பு (Indigofera aspalathoides)

கைதடி: வெண்கொடிவேலி (Plumbago zeylanica)

சரசாலை: கருங்காலி (Diospyros ebenum)

மட்டுவில்: கோழியவரை ( Canavalia ensiformis) , கடுக்காய் (Terminalia chebula roxb)

போன்ற பல மூலிகை பரம்பலில் உள்ள இடங்களிலுள்ள விவசாயிகள் அந்த மண்வளம், அச்சூழல் அம்மூலிகைகளின் வளர்ச்சிக்கு ஏற்றதனால் அச்சூழலிலேயே அவற்றை பயிரிட்டு அதன் உச்சப்பயன்பாட்டை பெற்றுக்கொள்ளலாம்.

இன்றைய நிலையில் மூலிகைகளே ஏற்றுமதிப் பயிர்களாக மாறியுள்ளமை அனைவரும் அறிந்ததே.

எமது அன்றாட வாழ்க்கையுடன் இணைந்த வேறு சில மூலிகைகளான; இஞ்சி, மஞ்சள், வெற்றிலை, கரிகாலை, பொன்னாங்காணி, வல்லாரை, சிறுகுறிஞ்சா, ஆவரசு, கறிவேப்பிலை, சிற்றரத்தை, பேரரத்தை, திப்பலி, துளசி, எலுமிச்சை, கொவ்வை, மொசுமொசுக்கை,

ஆடாதோடை, இக்கிரி, வாதமடக்கி போன்ற பலவற்றை பயிரிட்டு நோயில்லா சமூகத்தை உருவாக்க, விவசாயிகள் நீங்கள் கைகொடுங்கள்.

இவை மட்டுமன்றி, எண்ணெய் வித்துக்களை சேகரித்து, அதன் மூலம் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள; ஆமணக்கு, நிலக்கடலை, சூரியகாந்தி, இலுப்பை,

எள்ளு போன்றவை கூட எம்மண்ணில் நன்கு வளரக்கூடியவையே. இவற்றின் விளைச்சலையும் விவசாயிகள் மேற்கொள்ளலாம்.

இவ்வாறாக மூலிகைப் பயிர்ச் செய்கையை மேற்கொள்வது தனியே விவசாயிகளால் முடியாத காரியம். ஏனெனில் இது புதிதாக அறிமுகப்படுத்தப்படும் நடைமுறை. எனவே இதற்கான ஆலோசனைகளை விவசாயத்துறை வல்லுநர்களிடம் இருந்தும், விவசாயத்துறை விரிவுரையாளர்களிடம் இருந்தும், சித்தமருத்துவத்துறை விரிவுரையாளர்கள் , சித்தமருத்துவத்துறை - கைதடி என்பவற்றில் இருந்து பெற்றுக் கொண்டு உரியகாலத்தில் உரியமுறையில் பயிர்ச்செய்கையை அறிமுகப்படுத்தி பலனை அனுபவித்த விவசாயிகளை இணைந்து செயற்பட கைகூப்பிவரவேற்கின்றேன்.

இவை தொடர்பான மேலதிக விபரங்களுக்கு;

01) குணபாடப்பிரிவு,
சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

02) தலைவர்,
விவசாய உயிரியல்துறை,
விவசாயபீடம்,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

"விரைவீர் விவசாயிகளே !!
தமிழ்மருத்துவம் தழைக்கவே!!!!"

செ.போல்ரன் றஜீவ்
4ம் வருட சித்தமருத்துவ மாணவன்,
சித்தமருத்துவத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## தரம் - 05 புலமைப்பரிசில்
## மாணவர்களுக்கான
# தயார்படுத்தல் பரீட்சைத் தொடர் - 2009

வினாத்தாள் -I


நேரம்: 1 மணி 15 நிமிடங்கள்

* இல.1ஆம், 2ஆம் வினாக்களுக்கு வேறுபட்ட உருவின் கீழ்க்கோடிடுக.


01. 1)  2)  3)  4) 

02. 1)  2)  3)  4) 

* இல. 3ஆம். 4ஆம் வினாக்களிலுள்ள் உருவிற்கு மிகப்பொருந்தக்கூடிய விடையின் கீழ்க்கோடிடுக.



03. 1) கம்மாலையில் தயாரிக்கப்படும். வீட்டுப்பாவனைக்குத் தேவை.
    2) கம்மாலையில் தயாரிக்கப்படும். இது சில வேலைகளுக்குத் தேவை. ஆண், பெண் இரு சாராரும் இவற்றை பாவிப்பார்கள்.
    3) உருக்கினால் தயாரிக்கப்பட்டுள்ளது. இது அபாயகரமான ஆயுதம் ஒன்று. எவ்வேளைகளிலும் தேவைப்படாது. சிறிய பொருளாக இருக்கும்.



04. 1) உடற்பயிற்சி - ஊடகம் - சந்தோஷம்.
    2) வீடு - பொழுதுபோக்கு - ரசித்தல்.
    3) மேசை - களைப்பு - கட்புலன்.

* இல. 05-07 வரையான வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள சொல் உணர்த்தும் சோடிச்சொல்லின் கீழ்க்கோடிடுக.

05. தென்னை
    1) இளநீர், கொடி. 2) உணவு, மரம். 3) செடி, தேங்காய்.

06. விமானம்
    1) கடல், பறக்கும். 2) கடல், மிதக்கும். 3) ஆகாயம், பறக்கும்.

07. மலர்
    1) மாலை, மணம். 2) மணம், முள். 3) நிறம், கடினம்.

* கீழ்வரும் கவிதையை வாசித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிக்குக.

*உழுது பயிர் செய்வோன் - வயிற்றுக்*
*குணவு பற்றாமல் அழுதழுது நிதம் - நிற்ப*
*தறியரோ ஐயா!*

08. இக்கவிதையில் யாரைப்பற்றி கூறப்பட்டுள்ளது?
    1) வேலைக்காரன். 2) எருது. 3) கமக்காரன்.

09. இப்பாடலில் இருந்து நாம் விளங்கிக்கொள்வது,
    1) உழுது பயிர் செய்வோன் எருதுக்கு உணவு போடாமை.
    2) கடினமாக உழைத்தும் வறுமையால் வாடல்.
    3) உணவு பற்றாக்குறையாகக் காணப்படல்.
    4) உழவன் தான் சாப்பிடாமல் ஏனையோருக்கு கொடுத்தல்.

* கீழ்வரும் உருவை அவதானித்து கருத்துள்ள வசனம் 3 எழுதுக.



10. ..........................................

..........................................

..........................................


11. ..........................................................................................


12. ..........................................................................................


* தரப்பட்டுள்ள எண்கோலத்தை அவதானித்து விடையளிக்குக.

13.

1) 


2) 


3) 


4) 


14.

| | | |
|---|---|---|
| 15 | 12 | 9 |
| 18 | 3 | 6 |
| 21 | 24 | ....... |

* தரப்பட்டுள்ள வாக்கியம் குறிக்கும் தனிச்சொல் எது என்பதை இனங்கண்டு அச்சொல்லின் கீழ்க் கோடிடுக.

15. ஒரு இணக்க சபைத்தீர்ப்பில் எப்போதும் இருக்கவேண்டியது,
    1) நடு நிலை. 2) நீதி. 3) உடன்பாடு. 4) முடிவுக்கு வருதல்.

16. ஒரு கமக்காரனிடம் எப்போதும் இருக்கவேண்டியது,
    1) ஏர். 2) மாடு. 3) நெல். 4) நிலம்.

17. ஒரு பெட்டியில் 5 நீலநிற மாபிள்களும், 9 பச்சை நிற மாபிள்களும் உள்ளன. ஒரு பச்சைநிற மாபிளைப் பெற்றுக்கொள்வதற்கு பெட்டியில் இருந்து ஆகக்குறைந்த எண்ணிக்கையான எத்தனை மாபிள்களை வெளியே எடுக்கமுடியும்?
    1) 9 2) 6 3) 5 4) 10

18. பச்சை, மஞ்சள், சிவப்பு, கறுப்பு, நீலம் என்ற ஒழுங்கில் மின்குமிழ்கள் ஒரு தொடராகப் பொருத்தப்பட்டுள்ளன. இதில் 97 ஆவதாக காணப்படும் மின்குமிழின் நிறம் யாது?
    1) பச்சை. 2) மஞ்சள். 3) சிவப்பு.



19. தரப்பட்டுள்ள திண்ம உருவின் பெயர்,
    1) கூம்பகம். 2) நான்முகி. 3) அரியம்.

20. பஸ்லியா தெற்கு நோக்கி நடந்து வலதுபக்கம் திரும்பி பின்னர் இடப்பக்கமாகத் திரும்பி நடந்தாள். பின்னர் மீண்டும் இடது பக்கம் திரும்பி மீண்டும் ஒரு தடவை வலது பக்கம் திரும்பி நடந்தாள். தற்போது அவள் எத்திசையில் உள்ளாள்?
    1) வடக்கு. 2) தெற்கு. 3) கிழக்கு. 4) மேற்கு.

* தரப்பட்டுள்ள சொற்களையும், குறியீடுகளையும் அவதானித்து விடையளிக்குக.

| | | |
|---|---|---|
| பிள்ளைகள் | வேகமாகச் | செல்லுங்கள். |
| C | H | G |
| பிள்ளைகள் | மெதுவாகச் | செல்லுங்கள் |
| C | S | G |
| பிள்ளைகள் | முன்னால் | வாருங்கள் |
| C | P | F |
| எல்லோரும் | அமைதியாக | வாருங்கள். |
| A | V | F |

21. பிள்ளைகள் அமைதியாக வாருங்கள் என்பதைக் குறிப்பது,
    1) CFV 2) VFC 3) CVF



22. எல்லோரும் வேகமாகச் செல்லுங்கள் என்பதைக் குறிப்பது,
    1) AHG 2) CHS 3) AHC




**பின்வரும் கூற்றை வாசித்து 23,24 ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.**

* தந்தையினதும், தாயினதும் நிறைகள் 110kg ஆகும். தாயினதும் மகனினதும் நிறைகள் 70kg ஆகும். தந்தையினதும், மகளினதும் நிறைகள் 86kg ஆகும். மகனினதும், மகளினதும் நிறைகள் 46kg ஆகும். தந்தையினதும், சீமெந்துப்பை ஒன்றினதும் நிறை 112kg ஆகும்.

23. தாயின் நிறை யாது?
    1) 62kg 2) 48kg 3) 24kg 4) 22kg




24. மகளின் நிறை யாது?
    1) 62kg 2) 48kg 3) 24kg 4) 22kg

25. டாக்டர், சத்திர சிகிச்சை நிபுணர் ஆகியோருக்கு இடையிலான தொடர்பைக்காட்டுவது,
    1)  2)  3) 

26. மிருகங்கள், எருதுகள், பூனைகள் ஆகியவற்றைக்காட்டுவது,
    1)  2)  3) 


27. இடைவெளியில் வரவேண்டிய கோடு எது?



1)  2)  3) 

28. கொடிகள் சிவப்பு, பச்சை, நீலம் என்ற ஒழுங்கில் தொங்கவிடப்பட்டுள்ளன எனின், 112ஆவது கொடி என்ன நிறம்?
    1) நீலம். 2) பச்சை. 3) சிவப்பு.

29. இரு கம்பங்களுக்கு இடையே உள்ள தூரம் 13m ஆகும். 10 மின்கம்பங்களுக்கிடையே உள்ள தூரம் யாது?
    1) 130m 2) 117m 3) 120m



30. சமபக்க முக்கோண வடிவுள்ள தோட்டத்தை அம்புக்குறி வழியே பார்த்தபோது 9 தூண்கள் காணப்பட்டன. எனின், தோட்டத்தைச் சுற்றி எத்தனை தூண்கள் காணப்படும்?
    1) 24 2) 27 3) 30

31. என்னை விட என் சகோதரன் ரூபா 15/= அதிகம் வைத்துள்ளான். இருவரிடமும் ரூபா 85/= உண்டு எனின், என்னிடம் உள்ள பணம் எவ்வளவு?
    1) ரூபா 35/= 2) ரூபா 50/= 3) ரூபா 100/=

32. A குறியீடு இடப்பட்ட பெட்டியில் உள்ள ரின்மீன்களின் எண்ணிக்கை 180 அவ்வாறு B குறியீடு இடப்பட்ட பெட்டியில் உள்ள ரின்மீன்களின் எண்ணிக்கை 215 ஆகும். இங்கு A குறியீடு இடப்பட்ட ஏழு(7) பெட்டிகளிலும் B குறியீடு இடப்பட்ட ஆறு(6) பெட்டிகளிலும் உள்ள ரின்மீன்களின் மொத்த எண்ணிக்கை,
    1) 2,050 2) 2,075 3) 2,400 4) 2,550

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. தந்தையின் தற்போதைய வயது மகனுக்கு தற்போதைக்கு மூன்று வருடங்களுக்கு முன் இருந்ததை விட மூன்று மடங்காகும். தந்தையின் தற்போதைய வயது 30 எனின், மகனின் தற்போதைய வயது எத்தனை?
1) 10 2) 13 3) 7 4) 6

34. வாடிக்கையாளர் என்பவர்,
1) பொருட்களை வாங்குபவர். 2) பொருட்களை விற்பவர். 3) கடைக்கு வருபவர்.

35. பாடசாலை என்பது,
1) நற்பிரஜைகள் உருவாகும் இடம். 2) நல்ல பிள்ளைகள் உருவாகும் இடம்.
3) பரீட்சைக்காகக் கற்பிக்கும் இடம்.

36. கல்ஸானாவை விட தம்பியார் உயரமானவன். பாத்திமாவை விட கல்ஸானா உயரம் குறைந்தவள். மரியத்தைவிட கல்பியா உயரம் குறைந்தவள். இவர்களில் உயரமானவர் யார்?
1) பாத்திமா. 2) கல்பியா. 3) மரியம். 4) கூறமுடியாது.

37. புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாளில் நீங்கள் கட்டாயமாக பதிவுசெய்யவேண்டியது,
1) பாடசாலையின் பெயர். 2) ஆசிரியரின் பெயர்.
3) உமது சுட்டெண். 4) உமது பெயர்.

38. வசனத்தை ஒழுங்குபடுத்தும்போது வரும் மிகச்சரியான விடை எது?
A - பின்பு அது பெரும் மழையாக மாறிவிட்டது.
B - மழைத்துளிகள் விழ ஆரம்பித்தன.
C - ஒரு மணித்தியாலம் தொடர்ச்சியான மழை.
D - கடும் மழை பெய்யத்தொடங்கி விட்டது.
E - மழை மேகங்களால் சுற்றாடல் இருளடைந்துள்ளது.
1) BACE 2) EBACD 3) CDAEB

39. எனது தந்தையின் மனைவி எனக்கு,
1) அத்தை. 2) பாட்டி. 3) அம்மா.

40. 50 ஆவது ஆண்டில் கொண்டாடப்படும் விழா,
1) வெள்ளி விழா 2) பொன் விழா 3) வைர விழா

இவ்வினாத்தாளின் விடைக்குறிப்புக்களும் வினாத்தாள் 11 இன்பகுதி 11 உம் அடுத்தவாரம் வெளிவரும்......

## தயார்படுத்தல் பரீட்சை -10, பகுதி-11 இன் விடைக்குறிப்புகள்

01 - 1. நான், 2. இதயம், 3. மகிழாத, 4. குழந்தை, 5. அழகு, 6. மடு, 7. சூடு, 8. மரங்கொத்தி 9. மலை + என்று, 10 - உண்டு 02 - 1. உள்ளதைக்கொண்டு திருப்திப்படுவது நன்மை தரும், 2. நாம் எல்லோரும் ஒற்றுமையாக வாழவேண்டும். 03 - 1. அதிக ஆசை தீமை தரும், 2. சிறுவர்களை ஆரம்பத்தில் இருந்தே சீராக வளர்க்கவேண்டும். 04 - 1. நாளும், 2. நலிந்த, 3. அலை 05 - 1. Dog, 2. Telephone, 3. Flower 06 - 1. உமது பெயர் என்ன?, 2. தயவுசெய்து எழும்பவும், 3. புதுவருட வாழ்த்துக்கள். 07 - 1. எனக்கு தண்ணீர் தாருங்கள், 2. உங்களுடைய வயது எத்தனை? 08 - 3, 09 - 2, 10 - 4, 11 - 1, 12 - 2, 13 - 1, 14 - 3, 15 - 4, 16 - 1, 17 - 3, 18 - 1, 19 - 1, 20 - 3, 21 - 2, 22 - 3, 23 - 1, 24 - 2, 25 - 3, 26 - 3, 27 - 3, 28 - 4, 29 - 1, 30 - சாந்தகபபை, 31 - புரிசாவி, 32 - சுத்தியல், 33 - குறடு, 34 - காளான், 35 - சுண்டங்கத்தரி, 36 - வல்லாரை, 37 - வெற்றிலை, 38 - 48, 39 - 16, 40 - 81/ 350ml/, 41 - 7 [9] 7 / -[5] 7 [8] / 2 4 5, 42 - 245.00, 43 - 3.5cm, 44 - 9.05, 45 - 34cm, 46 - 28, 47- ⊠
48 - 1. 18, 2. 22, 3. 42, 4. வரைபில் வரைதல், 5.28.

**எதிர்வரும் வியாழக்கிழமை அம்பாறை மாவட்ட பிரபல ஆசிரியர் திரு.யு.எல்.எம்.சாஜித் தொகுத்துவழங்கும் வினாத்தாள்-11 வெளிவரும் என்பதை மாணவர்களுக்கு கல்விச் சுடர் அறியத்தருகின்றது.**

**ஆக்கம்:-ஆசிரியர் திரு.யு.எல்.எம்.சாஜித், கல்முனை/அல்-மஷ்கர் பெண்கள் உயர்தர பாடசாலை, நிந்தவூர்.**

**கல்விச்சுடர் தொடர்பான**
விமர்சனங்களுக்கும் கருத்துக்களுக்கும் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்க.
021-2229944 / 071-6850005 / 071-[illegible]35.

# கூட்டுறவு அமைப்புக்களின் மரம் நடுகை நிகழ்வுகளிலிருந்து...



மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மரம்நடுகை நிகழ்வு புத்தாண்டு தினத் தன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் மரம் நாட்டுவதைப் படத்தில் காணலாம். அருகில் சங்கத் தலைவர் இ.வன்னியசேகரம், பொது முகாமையாளர் நா.துரைச்சாமி, கணக்காளர் இ.வேல்குமார், ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் வலிதென்மேற்கு இணைப்பாளர் வே.மகேந்திரன் ஆகியோர் காணப்படுகின்றனர்.



நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மரம் நடுகை நிகழ்வு அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. சங்கத்தின் தலைவர் நா.சுந்தரலிங்கம், பொது முகாமையாளர் க.சிவலிங்கம், நெறியாளர்குழு உறுப்பினர்கள் க.தர்மலிங்கம், ப.இராசேந்திரம் ஆகியோர் இணைந்து மரம் நடுகையை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.




தெல்லிப்பழை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் மரம் நடுகை நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. சங்கத்தின் தலைவர் க.அருணகிரிநாதன் மரம்நடுகையை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் சங்கச் [illegible] பொது முகாமையாளர் கா.சிவஞானம் மற்றும் சங்கப் பணியாளர்கள் ஆகியோர் [illegible] கின்றனர்.




வடமராட்சி பனை,தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் மரம் நடுகை விழா அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட [illegible] அதிகாரி என்.சோதிநாதன் மரம் நாட்டுவதைப் படத்தில் காணலாம். அருகில் சங்கப் பொதுமுகாமையாளர் கி.பூபாலன், திக்கம் வடிசாலைப் பொறுப்பதிகாரி ஜி.நாகேந்திரா மற்றும் பணியாளர்கள் ஆகியோர் காணப்படுகின்றனர். (படம்: சுந்தா)

# உலகில் கூடியவை

## தேடல்கள்

- ★ உலகில் கூடிய நாடுகளைக்கொண்ட கண்டம் ஆபிரிக்கா ஆகும்.
- ★ உலகில் கூடிய மழை வீழ்ச்சி கிடைக்கும் பகுதி இந்தியாவிலுள்ள மேகாலயா மாநிலம் சீராபூஞ்சி என்பதாகும்.
- ★ உலகில் கூடிய வெப்பமான இடம் ஆபிரிக்காவிலுள்ள லிபியாவில் அஸ்ஸியா பகுதியாகும். (136°F)
- ★ உலகில் கூடிய சனத்தொகை கொண்ட நகரம் யப்பானின் டோக்கியோ ஆகும்.
- ★ உலகிலேயே மிகக்கூடுதலாகக் கிடைக்கும் உலோகம் அலுமினியம் ஆகும்.
- ★ உலகில் அதிக கூடுதலாக பயன்படுத்தும் காய்கறி வெங்காயம் ஆகும்.
- ★ உலகிலேயே கூடிய நாள்கள் (1770 ஆண்டுகள்) பழமையான மரம் இந்தியாவில் கல்கத்தா பொட்னிக்கல் கார்டினில் 1/2 ஹெக்ரர் பரப்பள வில் பரந்திருக்கிறது.
- ★ உலகில் கூடிய ஆண்டுகளாக (400) மழை கிடைக்காத பகுதி சிலி நாட்டில் உள்ள அட்டகாம பாலை நிலைப்பகுதியாகும்.

ஜெ.வெஸ்மிலா, பெருமாள் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

## கோபம் வரவே வராதா.....

பஸ்நிலையத்தை விட்டு பஸ்கிளம்பிக்கொண்டு இருந்தது. பஸ்ஸின்
மிதிப்பலகையின் ஓரமாக வாசலை அடைத்த படி ஒரு சாக்கு மூடை
வைக்கப்பட்டிருந்தது. அந்தச் சாக்கு மூடைக்கு மேல் ஒரு கிழவி அமர்ந்து கொண்டு
வெற்றிலை, பாக்கு போட்டுக்கொண்டிருந்தாள். பஸ்ஸில் ஏறுபவர்களுக்கும்
இறங்குபவர்களுக்கும் இது பெரும் இடைஞ்சலாக இருந்தது.
இதனை அவதானித்த நடத்துநர் 'ஆச்சி மூடையை வாசலில் போட்டுக்கொண்டு
அதன் மேல் ஏறி இருக்கிறாயே அதனை தூக்கி ஓரமாகப்போட்டு விட்டு
அமர்ந்திருக்கலாமே' என்றார்.
ஆனால் கிழவியோ நடத்துநரைப் பார்த்து சிரித்து விட்டு, அதே இடத்தில்
அமர்ந்திருந்தாள். 'ஆச்சி நான் சொல்லுறது உன்ரை காதில விழவில்லையா? சாக்கு
மூடையை தூக்கி ஓரமாகப் போட்டு விட்டு அமர்ந்து கொள்' என்றார் நடத்துநர்.
அப்போதும் கிழவி சிரித்து விட்டு அதிலேயே அமர்ந்து கொண்டிருந்தாள்.
நடத்துனருக்கோ கடுமையான கோபம் வந்தது." ஆச்சி இனியும் நீ மூடையை
ஓரமாகப்போடவில்லை என்றால் அந்த மூடையை பஸ்சிற்கு வெளியே வீசி
விடுவேன்' என்று கிழவியை எச்சரித்தார்.
அதற்கும் கிழவி எந்த அசைவும் இல்லாமல் அங்கேயே உட்கார்ந்திருந்தாள்.
நடத்துனருக்கோ அதற்கு மேலும் பொறுக்கமுடியவில்லை. மூடையை இழுத்து
பஸ்சுக்கு வெளியே எறிந்து விட்டு கிழவியைப் பார்த்தார்.
அப்போதும் கிழவி நடத்துன்ரைப் பார்த்து சிரித்து விட்டு பஸ்ஸின் ஓரமாக
நின்று கொண்டு பயணத்தை தொடர்ந்தாள்.
நடத்துநருக்கோ ஆச்சரியம் 'என்னம்மா நான் உனது மூடையை தூக்கி வெளியில்
எறிந்து விட்டேன்'. உனக்குக் கோபம் வரவில்லையா? என்று கேட்டார் நடத்துனர்.
கிழவி சொன்னாள் 'யாரோ ஒருவருடைய மூடையை நீ தூக்கி எறிந்ததற்கு நானேன்
கவலைப்பட வேண்டும்?'

## ஒழுக்கம் உயிரினும் மேலானது

ஒழுக்கம் என்பது ஒரு மனிதனது எல்லா நடவடிக்கைகளிலும் கலந்திருக்கவேண்டிய தொன்றாகும். இது உள்ளத்தின் ஆழத்தில் பதியப்பட்டிருக்க வேண்டியதாகும். ஒமுக்கம் என்பது உள்ளத்தைப்பற்றியதாகும். எப்படி நீ ஒழுக்கத்தை உருவாக்குகிறாயோ அப்படியே உன்வாழ்வு அமைந்து விடுகின்றது என்கிறார் ஓர் அறிஞர்.

'அரிது அரிது மானிடராதல் அரிது' என்றார் தமிழ் வளர்த்த எங்கள் ஔவைப்பாட்டி. இந்த உலகத்திலேயே எத்தனையோ பிறவிகள் இருந்தாலும் மானிடப் பிறவி என்பது கிடைக்கற்கரிய பேறு என்பதே அவரது கருத்தாகும். இதனையே சிவபுராணத்திலும் புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி பல் மிருகமாகி பறவையாய் பாம்பாய் கல்லாய் மனிதராய் எனக் குறிப்பிடுகிறது. உயிர்கள் இவ்வுலகத்தில் எடுக்கும் எல்லாப் பிறவிகளிலும் மேலானது இந்த மனிதப்பிறப்பு . ஔவையார் தொடர்ந்து கூறுகையில் அதனிலும் அரிது அரிது கூன் குருடு செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது என்கிறார். மனிதனாய் பிறந்தால் மட்டுமே போதாது. குறைபாடுகள் அற்ற ஒரு நிறைவான மனிதனாகப் பிறப்பது பேறு என்கிறார். இந்த பெரும் பேற்றை பெற்ற எல்லோரும் ஒழுக்கத்தை வாழ்விலே உருவாக்கி கொள்ள வேண்டும். ஒழுக்கத்திற்கு அடிப்படையாக அமையவேண்டிய பண்புகள் உண்மை பேசுதல், பஞ்சமா பாதகங்களை நீக்குதல், பெரியோரை மதித்தல், குருவை வணங்குதல், நன்றி மறவாமை, பிறர்மனை விழையாமை, அடுத்தவனுக்கு தீமை நினைக்காமை, பொறாமை இல்லாமை, தெய்வபக்தி ஆகியவையாகும். பெற வேண்டிய அறிவுகள் அனைத்திலும் உயர்ந்தது ஒமுக்கத் தூய்மையே என்று கூறுகிறார் காந்தியடிகள். இராவணன் சிறந்த சிவபக்தன், பெருமைக்குரிய இசை மேதை, வீராதிவீரன், இராவனேஸ்வரன் என்று எடுத்து பேசப்பட்டவன். ஆனால் பிறர் மனைவியை இச்சித்த குற்றம் அவனை சார்ந்தது. இதனால் தன் வாழ்நாளில் பெற்ற பெருமைகளை எல்லாம் இழந்துவிடுகிறான்.

தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை.

என்ற திருக்குறள் இந்த உண்மையை எடுத்துக் காட்டுகிறது. தலையிலே இருக்கும் வரை கூந்தலுக்கு மதிப்பு உண்டு. கீழே உதிர்ந்து விட்டால் எந்த வித மதிப் பையும் இழந்து தூர வீசப்படுகிறது. இதே நிலைதான் மனிதவாழ்விலும் ஏற்படுகின்றது. துரியோதனன், இராவணன் நமக்கு ஒன்றும் செய்யவில்லை. ஆனால் பெயரைக் கேட்டவுடன் வெறுப்பு ஏற்படுகின்றது. இராமன், தர்மன் என்ற பெயரை சொன்னவுடன் அன்பும், மதிப்பும் ஏற்படுகின்றது. ஒழுக்கம் உடையவர்களின் வாய்ச் சொல்லும் உயர்ந்ததாகவே அமைகின்றது. மறந்தும் இழிவான வார்த்தைகளை பேச இடமளிக்கலாகாது.

ஆசிரியர் திருமதி வ. சிறீதரன்,
யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை

## என்னவள் இவள்

காலைப்பொழுதில் நான்
கண் விழிப்பதும் அவளின்
அழகான முகத்தில் தான்!
வெளிச்செல்லும் நேரத்தில்
என்னை அவசரப்படுத்தி
ஆனந்தம் கண்டு
சிரிப்பவளும் அவள் தான்!
காத்திருக்கும் நேரங்களில்
ஏமாற்றம் என்றால்
அந்த அழகான
முகக் கண்ணாடியில்
அடிக்கத் தோன்றும்
அதுவும் அவளுக்குத் தான்!
அதைக்கடந்து செல்வாள்
என்ற எதிர்பார்ப்புடன்
நிற்க இருகை வீசி
விரைவாக சென்று என்னை
ஏமாற்றுபவளும் அவளேதான்
சமிக்கை கொடுத்து அதிகாலை
கனவுகளை முறியடிக்கும்
கனவுக்கன்னியும் அவள்தான்!
அவள்தான் ! அவளே தான்!!
கடிகாரம்!!!

பிரியங்கா
நடனசிகாமணி,
யாழ்ப்பாணம்.

## ஒப்படை ஒப்பாரி

ஓடி விளையாடு பாப்பா- என்று
பாடி வைத்தாரே பாரதியார்!
ஒப்படை வந்ததும் எம் மகிழ்ச்சி
ஓடிப்போனதை யாரறிவார்.....?
கணிப்பீடு வந்து எம்மை
கட்டிப் போட்டதை யார் புரிவார்.....?
ஓடி நாமும் விளையாடி
ஆடிப்பாட முடியாமல்
ஓடிப்போனதே எம்காலம்
குட்டான் சோறு நாம் சமைத்து
கூடி விளையாடிய காலங்கள் - இனி
கூடாமல் போகுமோ எம்வாழ்வின்!
தேடிப்படிக்க நாள் தோறும்
புத்தகம் தேடிப் பொழுதே போனதே!
புதிய கல்வித் திட்டத்தால்
புலம்புகிறார் நம் குருவும்
நாளை ஓடி உழைப்பதற்காய்
இன்றே ஓடுகிறோம் ஒப்படைக்காய்
ஒப்படை வந்து எம்வாழ்வில்
போட்டது தடைகள் பல கண்டீர்
எப்படை வந்து இதை மாற்றும்.....?
எத்தடை வரினும் தொடர்ந்திடுமா
ஒப்படை எனின் என் செய்வோம்....?
பல படை வென்ற
அறுபடை வேலா - இவ்
ஒப்படை நீங்க
நின்னருள் தாராய்

செ.தயாளினி, மிருசுவில்.

## கேள்விக்கு என்ன பதில்? -23

நியூயோர்க் நகரிலிருந்து 1000 கி.மீ வேகத்தில் செல்லும் மின்சார ரயில் ஒனறு வடக்குத் திசையில் உள்ள ஒரு தரிப்பிடத்தில் நிறுத்தப்படுகின்றது. அதன்பின்னர் அது கிழக்கு நோக்கி தனது பயணத்தை ஆரம்பிக்கிறது. அப்போது காற்று ரயில் பயணிக்கும் எதிர்த்திசை நோக்கி வீசிக்கொண்டிருக்கிறது. இப்போது ரயிலின் புகை எந்தப் பக்கம் நோக்கி வெளித்தள்ளப்படும்?

(03.05.2009 இற்கு முன்னர் விடைகளை அனுப்பி வைக்கவும்)

# இளவல்கள் வட்டம்

YOUTH

## வரலாற்றில் இந்த வாரம்

**ஏப்ரல் - 17**




இந்தியாவின் ஜனாதிபதியாக இருந்தவரும், தத்துவ மேதையுமான டாக்டர் ராதாகிருஷ்ணன் 1975 ஆம் ஆண்டு ஏப்ரல் 17 இல்தான் மறைந்தார்.

**ஏப்ரல் - 18**

1906 ஆம் ஆண்டு ஏப்ரல் 18ம் திகதி சான்பிரான் சிஸ்கோ நகரத்தில் பெரும் பூகம்பம் நிகழ்ந்தது. இதில் ஆயிரக்கணக் கானோர் உயிரிழந்தனர்.



**ஏப்ரல் - 19**



விண்வெளி யுகத்தினுள் இந்தியா காலடி எடுத்து வைத்தது 1975ஆம் ஆண்டு ஏப்ரல் 19ல் தான். ரஷ்யாவின் ஏவுகணைத் தளத்திலிருந்து இதே நாளில்தான் ஆர்யபட்டா என்ற இந்தியச் செய்மதி விண்ணுக்கு ஏவப்பட்டது.

**ஏப்ரல் - 20**

இரண்டாம் உலகப் போருக்கும் ஜேர்மனியின் எழுச்சிக்கும் வித்திட்ட அடல்ப் ஹிட்லர் 1889 ஆம் ஆண்டு ஏப்ரல் 20ம் திகதி பிறந்தார்.



**ஏப்ரல் - 21**



இங்கிலாந்து ராணியான இரண்டாம் எலிசபெத் 1926 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி பிறந்தார்.

**ஏப்ரல் - 22**

பிரபல வயலின் மேதையான எஹூதி மேனு ஹின் என்பவர் 1916 ஆம் ஆண்டு ஏப்ரல் 22 இல் நியூயோர்க்கில் பிறந்தார். இவர் ஏழு வயதிலேயே வயலின் வாசிப்பதில் புகழ் பெற்று விளங்கினார்



**ஏப்ரல் - 25**



இங்கிலாந்தைச் சேர்ந்த உலகப் புகழ் பெற்ற நாடகாசிரியரான வில்லியம் ஷேக்ஸ்பியர் 1564 ஆம் ஆண்டு ஏப்ரல் 23 ஆம் திகதிதான் பிறந்தார்.

## கேள்விக்கு என்ன பதில் 21 இன் சரியான விடை

கந்தன் எண்ணியது தவறு.100 முட்டைகளும் பத்துநிமிடத்தில் அவிந்துவிடும்

## கேள்விக்கு என்ன பதில்? - 21- பரிசு பெறுவோர்

முதலாம் பரிசு - கோ.அபிலாஷினி, 34 A காட்டுக்கந்தோர் வீதி, சுண்டிக்குளி.
இரண்டாம் பரிசு - யே.லிமோஜன், 01, கதிற்றல் வீதி, யாழ்ப்பாணம்.
மூன்றாம் பரிசு - ந.சனோசா, மீசாலை கிழக்கு, மீசாலை.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-.............................................
முகவரி :-.............................................
:-.............................................
.................. ..................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நிலைவரம் குறித்து பாதுகாப்புச் சபையில் ஆராயுமாறு பல்வேறு நாடுகள் வேண்டுகோள்

நியூயோர்க், ஏப்.23

இலங்கை நிலைவரம் தொடர்பாக ஐ.நா.பாதுகாப்புச் சபையில் ஆராயப்பட வேண்டும் என அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் உட்பட பல நாடுகள் ஒருமித்த குரலில் வேண்டுகொள் விடுத்துள்ளன.

வன்னியில் பாதுகாப்பு வலயத்தை இலக்குவைத்து இலங்கை இராணுவம் நடவடிக்கையை ஆரம்பித்த பின்னர் திங்கட்கிழமை அவசர அவசரமாக பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பு நாடுகள் இலங்கை குறித்து ஆராய்ந்துள்ளன.

இதன்போது சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் தலைமை அதிகாரி விஜய் நம்பியாரிடமிருந்து பாதுகாப்புச் சபை விளக்கவுரையொன்றைப் பெற வேண்டுமென்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ள 'இன்னர்சிட்டி பிரஸ்' செய்திச்சேவை இது குறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கைப் பாதுகாப்பு வலயத்தில் இராணுவ நடவடிக்கையைத் தொடரப் போவதாக தெரிவிக்கும் இதேவேளை, இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளர் நாயகத்தின் பிரதம அதிகாரி விஜய் நம்பியாரிடமிருந்து பாதுகாப்புச் சபை விளக்கவுரையொன்றைப் பெறவேண்டும் என திங்கட்கிழமை ஆராய்ந்தது.

இவ்வேண்டுகோளுக்கு ஆதரவளிப்பதாக அமெரிக்காவின் ஐக்கிய நாடுகளுக்கான பிரதி நிரந்தரப் பிரதிநிதி அலெக்ஜாண்டிரோ வூல்வ் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பாக ஆராயப்பட வேண்டும் என்ற பிரிட்டனின் வேண்டுகோளை அமெரிக்கா ஆதரிக்கிறது என அவர் தெரிவித்துள்ளார்.

திங்கட்கிழமை மூடிய கதவுகளுக்குப் பின்னால் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது பாதுகாப்பு சபையில் நம்பியார் உரையாற்ற வேண்டும் என பிரான்ஸ் வேண்டுகோள் விடுத்தது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கைக்கான பிரிட்டனின் விசேட பிரதிநிதி டெஸ் பிரவுணி ஐக்கிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார் என அந்த நாட்டின் ஐக்கிய நாடுகளுக்கான வதிவிடப் பிரதிநிதி ஜோன் சவெர்ஸ் தெரிவித்துள்ளார்.

திங்கட்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின்போது, பாதுகாப்புச் சபையில் இடம்பெறும் எந்தவொரு விவாதத்தையும் விடுதலைப் புலிகள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தக்கூடும் எனத் தெரிவித்துள்ள சீனா, இது குறித்து அவதானமாக இருக்கவேண்டுமென எச்சரித்துள்ளது.

இதேவேளை, விடுதலைப் புலிகளைக் குற்றம்சாட்டி திங்கட்கிழமை ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் விடுத்த அறிக்கையில், பாதுகாப்பு வலயத்தின் மீது யார் மிகவும் ஆபத்தான ஷெல் வீச்சை மேற்கொள்வது என்பதைத் தெரிவிக்காதமையைச் சுட்டிக்காட்டி பான் கீ மூனின் அறிக்கை நடுநிலையானதா என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது. (சி)

## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், ஏப்.23

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கும், யேசுசபை அகதிகள் பணி (ஜே.ஆர்.எஸ்.) ஆங்கில ஆசிரியர்களுக்குமான ஆங்கில தினப் போட்டிகள் தொடர்பான பயிற்சிப் பட்டறை நாளை வெள்ளிக்கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (50-207)

# பொதுமக்களின் பாதுகாப்புக் குறித்து இந்தியா மீண்டும் கவலை தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 23

இலங்கை அரசு இராணுவ நடவடிக்கைகளை தீவிரமாகியுள்ளதால் பொதுமக்களின் நிலை குறித்து இந்தியா கவலை வெளியிட்டுள்ளது. அத்துடன், பொதுமக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதை உறுதிப்படுத்துமாறு இலங்கை அரசை இந்திய மீண்டும் கேட்டுள்ளது.

டில்லியில் செய்தியாளர்கள் சந்திப்பின் போதே பிரணாப் முகர்ஜி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு -

இலங்கையில் இராணுவ நடவடிக்கை தீவிரமாக்கப்பட்ட நிலையில் அங்கு பொது மக்களின் நிலைமை மோசமடைந்துள்ளது. இதனையிட்டு நாம் கவலையடைகிறோம்.

அதேவேளை, புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து வெளியேறும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும்படி நான் இலங்கை அரஸ்சக் கேட்டுள்ளளேன் - என்றார்.

இதேவேளை, இந்தியப் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஆனந்த சர்மாவும் பொதுமக்களின் நிலைகுறித்து கவலை வெளியிட்டதுடன் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் படியும் இலங்கை அரசைக் கேட்டுள்ளார். (அ-சி)

# பாதுகாப்பான இடங்களுக்கு வந்ததை வரவேற்கிறார் மூன்

நியுயோர்க், ஏப்.23

பாதுகாப்பான இடங்களை நோக்கிப் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் வருகை தந்தது வரவேற்கத்தக்கது என்று ஐ.நா.பொதுச் செயலாளர் பான் கீ மூனின் ஊடக அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெவிக்கப்பட்டுள்ளது.

எனினும் மோதல்கள் இடம்பெறும் பகுதியில் சிக்கியுள்ள ஏனைய பொதுமக்கள் குறித்து ஆழ்ந்த கவனம் செலுத்துவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் செறிந்து வாழும் பகுதிகளின் மீது பாரிய ஆயுதங்களால் தாக்குதல் நடத்தப்படுவதும், மோதல் இடம்பெறும் பகுதிகளில் இருந்து பொதுமக்கள் வெளியேறுவதை விடுதலைப் புலிகள் தடுப்பதும் கவலையளிப்பதாவும் பான் கீ மூனின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த புதுமாத்தளன், வலைஞர் மடம் மற்றும் அம்பலவன் பொக்கனை பகுதிகளில் இருந்து 35,000 பொதுமக்கள் இராணுவத்தினரிடம் தஞ்சமடைந்துள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு நேற்றுத் தெரிவித்திருந்தது தெரிந்ததே. (அ)

# நீர்கொழும்பு, மினுவாங்கொடவில் நேற்றுத் தேடுதல்; 16 தமிழர் கைது!

கொழும்பு, ஏப். 23

நீர்கொழும்பு, மினுவாங்கொட ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற தேடுதல் சோதனை நடவடிக்கையில் 16 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை குறித்த பிரதேசங்களில் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட கடற்படையினரும் பொலிஸாரும் அவர்களை கைது செய்தனர் என உறவினர்கள் பிரதி அமைச்சர் இராதாகிருஸ்ணனிடம் முறையிட்டுள்ளனர்.

இத்தேடுதலின்போது பல தமிழர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். கைது செய்யப்பட்ட இளைஞர்கள் நீர்கொழும்பு, மினுவாங்கொட பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை சீதுவை, கட்டுநாயக்கா, பிரதேசங்களிலும் பொலிஸார் நேற்று முன்தினம் சோதனை தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். வீதியால் சென்றவர்களும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர் எனக் கூறப்பட்டது. (சி)

# பாதுகாப்பு வலயத்தில் சிக்குண்டுள்ள மக்களுக்கு செஞ்சிலுவைக் கப்பலில் உணவுப் பொருள்கள்

ஜெனீவா, ஏப்.23

வன்னியில் பாதுகாப்பு வலயத்துக்குள் சிக்குண்டுள்ள மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை ஏற்றியவாறு கப்பலொன்று நேற்று முன்தினம் மோதல் தவிப்புப் பிரதேசத்தின் தெற்குப் பகுதியை சென்றடைந்துள்ளதாக சென்சிலுவைச் சர்வதேசக் குழுவின் ஜெனீவா தலைமையகப் பேச்சாளர் சைமன் சொலமஸ் தெரிவித்துள்ளார்.

மோதல் நிலவும் பகுதியில் சிக்கியுள்ள மக்களின் நிலை மிகவும் கவலையளிப்பதாக உள்ளது. அங்கு எந்தவித மருத்துவ வசதிகளும் இல்லை. மிகக்குறைந்தளவிலேயே சுத்தமான குடிநீர் உள்ளது. இந்நிலையில் அங்கு 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் சிக்குண்டுள்ளனர். அவர்கள் மிகவும் மோசமான பொருளாதார நிலைக்கும் ஒட்டுமொத்தமாக மிகவும் கடினமான பாதுகாப்பு நிலைக்கும் இடையே அகப்பட்டுள்ளனர். அவர்கள் அங்கு நிலவும் கடுமையான போர் காரணமாக கொல்லப்பட்டும் காயப்பட்டும் வருகிறார்கள் என்றார் சைமன்.

கடந்த 48 மணித்தியாலயங்களில் மோதல்கள் மிகவும் உக்கிரமமடைந்ததால் பெருமளவிலான மக்கள் பாதிப்படைந்துள்ளனர். 2 தினங்களில் வெளியேறியவர்கள் தொடர்பில் தமக்கு சரியான எண்ணிக்கைகள் கிடைக்கவில்லை எனக் கூறியதுடன் வெளியேறிய மக்களின் எண்ணிக்கையை கணக்கெடுக்க முடியாதுள்ளதாகவும் ஓமந்தை இடைத்தங்கல் முகாமில் 10 ஆயிரம் பேர் இருப்பதாகவும் தாங்கள் கணித்துள்ளதாகவும் சைமன் சொலமஸ் குறிப்பிட்டார்.

இதேவேளை மோதல் தவிர்ப்புப் பிரதேசத்தில் தங்கியுள்ள தமது செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பணியாளர்களுடன் தாம் தொடர்பில் இருப்பதாகவும் மக்கள் வெளியேறி தங்கியுள்ள புதுக்குடியிருப்பு பகுதிகளுக்குள் தமது பணியாளர்கள் செல்வதற்கு அனுமதிக்கபடவில்லை என்றும் தாம் அங்கு சென்று தொண்டுப் பணியில் ஈடுபட முயற்சிகளை எடுத்து வருவதாகவும் செஞ்சிலுவைச் சர்சதேசக் குழுவின் பேச்சாளர் சைமன் செஸமஸ் தெவித்தார். (50-06)

# 89 சிறுவர்கள் கடந்த ஆண்டு பாடசாலை செல்லவில்லை

யாழ்ப்பாணம், ஏப்.23

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஆண்டு 89 சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லவில்லை என்று மாவட்ட சிறுவர் அபிவிருத்தி அலுவலகத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிகக்ப்பட்டுள்ளது.

குடும்பத்தில் ஏற்பட்ட வறுமை, அசாதாரண சூழ்நிலையில் பெற்றோரை இழத்தல் எனப் பல்வேறு காரணங்களால் இந்தச் சிறுவர்கள் இதுவரை பாடசாலைக்குச் செல்லவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை பரடசாலைக்குச் செல்லாத சிறுவர்களின் விவரங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

யாழ்ப்பாணம்-04, நல்லூர்- 04, கரவெட்டி-35, சண்டிலிப்பாய்-07, சாவகச்சேரி- 05, தெல்லிப்பழை- 02, பருத்தித்துறை- 06, உடுவில்-22, காரைநகர்-04. (50-9)



வன்னியின் பாதுகாப்பு வலயப் பகுதியில் இருந்து விடுவிக்கப்பட்ட பெருமளவு மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி வருகை தருவதையும்,பாதுகாப்பான இடங்களில் தங்கி இளைப்பாறுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: பாதுகாப்பு அமைச்சு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவாலி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய தேர்த் திருவிழாச் சிறப்பிதழ் 23.04.2009

## மகோற்சவ குருவின் ஆசி



வானுலகும் மண்ணுலகும் வாழ மறைவாழ
பான்மைதரு செய்யதமிழ் பார்மினு விளங்க
ஞானமத ஐந்து கர மூன்று விழி நால்வாய்
ஆனைமுகனைப் பரவி அஞ்சல் செய்கிற்பாம்

தன்னைவிட மேலான ஒரு தலைவன் இல்லாதவன் விநாயகன். அவன் பல நாமங்களைக் கொண்டு அருள் பாலிக்கின்றான். காமதேனு, கற்பகதரு, சிந்தாமணி போன்றவை தேவலோகங்களில் செல்வங்களை அள்ளிச் சொரிவன. இவ்வகையில் நவாலி ஊரிலே பன்னெடுங்காலமாக தன்னை நாடிவரும் அடியவர்களின் இன்னல்களைப் போக்கி வேண்டுவதை ஈந்து நல்லருள் பாலிக் கின்றார் சிந்தாமணி விநாயகர். இவ்வாலயம் புகழ்பூத்த நவாலி யூர் விஸ்வநாதக்குருக்கள் ஐயாவின் மருகரான சுப்பிரமணியக் குருக்களின் குடும்பத்தவரின் பரம்பரையானது. இப்பொழுது சுப்பிரமணியக் குருக்கள் அவர்கள் நித்தியபூஜை, உற்சவங்கள் போன்றவற்றைச் செய்து வருகிறார். மக்களின் ஒத்துழைப்புடன் திருவாளர்கள் யோகானந்தம், கந்தவனம் ஆகியோர் ஆலயத்தைப் பரிபாலித்து வருகின்றார்கள். இவ்வாலயத்தில் மகோற்சவம் செய்வதை பெரும் பாக்கியமாக கருதுகின்றேன். இன்றையதினம் தேர்த் திருவிழா ஆகும். ஆணவ மலத்தை அழித்து அடியார்களுக்கு நல்லருள் பாலிக்க பஞ்சமுக சிந்தாமணி விநாயகர் தேர் ஏறி வருகிறார். யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக இவ்வாலயத்திற்குத்தான் பஞ்சமுக விநாயகர் பிரதிஷ்டை செய்யப்பட்டது. தேரேறிவரும் விநாயகர் அடியார்களுக்கு இன்னருள் செய்து நாட்டில் சாந்தி, சமாதானம், நிலவி மக்கள் சுபீட்சமாக வாழ வழிவாட்ட வேண்டுமென்று பிரார்த்தித்து அனைத்து அடியார்களுக்கும் நல்லாசி கூறுகின்றேன்.

லோக சமஸ்தா சுகினோ பவந்து
வேதசிவாகமஞானபானு, கிரியாசாகரம்
பிரம்மஸ்ரீ க.மு.சோமசுந்தரக்குருக்கள் (மகோற்சவக் குரு)


**ஸ்ரீ தவயோகா ஸ்ரோர்ஸ்**
எஸ்.ரி.வை.மர அரிவு ஆலை
மர வியாபாரிகளும் கட்டட மரத் தளபாடங்கள் விநியோகிப்பவர்களும்
கூளாவடி, ஆனைக்கோட்டை.

**கவி போட்டோ**
கலர், வெள்ளை படங்கள், (பாஸ்போட்,அடையாள அட்டை)
திருமண, பூப்புனித விழாக்களுக்கான குறித்த நேரத்தில் ஒடுக்கு செய்து தரப்படும். கே.கே.எஸ்.றோட், இணுவில்.

**தணிஸ் றெக்ஸ்**
ஆண், பெண், சிறுவர்களுக்கான றெடிமேட் உடுப்புவகைகள் மற்றும் சொக்கட்டான் பந்தல், மணவறை, பூமணவறை சமையல் பாத்திரங்கள் வாடகைக்கு. நவாலி றோட், ஆனைக்கோட்டை.




## நமக்கருள் புரியும் நவாலியூர் பெருமான்

ஈழநாட்டிலே யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நவாலியூரில் முழுமுதற் கடவுளாக விளங்கும் சிந்தாமணிப் பிள்ளையார் நூற்றம்பது ஆண்டுகளுக்கு முன்னரே கோயில் கொண்டு எழுந்தருளி அருள்பாலித்துவருகிறார்.

சிவாச்சாரியார் கணபதீஸ்வரக் குருக்கள் பாரத நாட்டுக்குத் தீர்த்த யாத்திரை செய்தபோது காசி விஸ்வநாதப் பெருமானை வணங்கி வழிபட்டு நின்றார். அந்த வேளையில் ஒரு பிராமணப் பெரியார் விநாயகப் பெருமானின் சிலை ஒன்றைக் கொடுத்துப் பூசிக்குமாறு கூறினார். இவரது இளைய புதல்வர் விஸ்வநாதக் குருக்கள் ஆலயம் அமைத்து பூசைகளைச் சிறப்பாக நடத்தி வந்தார். இவரது புதல்வர் சோமசுந்தரக்குருக்கள், மாமனார் கார்த்திகேசுக் குருக்களிடம் சகல கலைகளையும் பயின்று ஆலயத்தைச் சகல வழிகளில் திறம்பட நடத்திவந்தார். 1921 ஆம் ஆண்டில் நா.சிவசுப்பிரமணியக் குருக்கள் நல்லூர்க் கார்த்திகேயக் குருக்கள் ஆகியோரால் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.வருடந்தோறும் 10 திருவிழாக்கள் நடைபெற்றன. 1940 ஆம் ஆண்டு தொடக்கம் கொடியேற்றம், தேர், தீர்த்தம், மகேஸ்வர பூசை, புராண படலம், கஜமுகாசூர சங்காரம் முதலியன நடைபெற்றன.

1950 ஆம் ஆண்டில் ஐந்து முகவிநாயகப் பெருமான் திருவுருவை முதன்முறையாக வண்ணை இராமகிருஸ்ண ஆசாரியைக் கொண்டு அமைத்து, தனது மைத்துனர் கலாநிதி கா.கைலாயநாதக் குருக்களின் உதவியுடன் கும்பாபிஷேகம் செய்வித்தார். இவ்வாலயம் பொதுமக்கள் பேருதவியுடன் புனருத்தாரணம் செய்யப்பட்டு மண்டபம், யாகசாலை முதலியன அமைக்கப்பட்டு சாமி விஸ்வநாதக் குருக்களைப் பிரதம குருவாகக் கொண்டு வேத பாராயணங் கள், திருமுறைகள் முறைப்படி ஓதிக் கிரியைகள் சிறப்புற நடை பெற்றன.


**சந்திரன் பான்சி பலஸ்**
நியாய விலையில் அழகுசாதனப் பொருள்கள், பரிசுப் பொருள்கள், பிறந்தநாள், திருமண வைபவத்துக்கான வாழ்த்து காட் வகைகள் மற்றும் **துரையா கல்யாண மண்டபம்**
திருமண நிகழ்வுகள், விழாக்களுக்கு வாடகைக்கு விடப்படும்.
நவாலி றோட், ஆனைக்கோட்டை.


## செயலாளர் பிரார்த்தனை

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு

சிறிசிந்தாமணி விநாயகர் அருள் கிடக்க எமக்கு வழிசெய்த பிரதமகுரு பிரம்மஸ்ரீ சுப்பிரமணியக்குருக்கள் (ஆலய தர்மகர்த்தாவும் எமது குருவும்) ஆசியால் செயலாளர் பதவியை தந்து கொண்டு செய்ய வைத்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்து,

தேர் ஏறிவரும் நன்நாளில் பஞ்சமுக விநாயகர் எல்லா மக்களும் சுபீட்சமாக வாழ வைக்கவேண்டும் என பிரார்த்திக்கின்றோம்.

த.மோகனதாஸ், செயலாளர்.

## பொருளாளர் வாழ்த்து

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியுள் வைத்தடி போற்றுகின்றோமே

நவாலியம்பதியில் அழகுற வீற்றிருக்கும் சிந்தாமணிப் பிள்ளையாரின் தேர்த்திருவிழா (23.04..2009) வியாழக்கிழமை இன்று நடைபெறுகின்றது. எல்லாம் வல்ல விநாயகனின் தேர்த்திருவிழா வருடந்தோறும் மிகவும் சிறப்பாக நடைபெற்றுவருகிறது என்பது யாவரும் அறிந்ததே. சுவாமி விஸ்வநாத குருக்களின் ஆசியுடன் கோயில் திருவிழாக்கள் சிறப்புற நடைபெற்று வருகின்றன.

தேர்த் திருவிழா சிறப்புற நடைபெற்று மக்கள் அனைவருக்கும் அருள் பாலிக்க சிந்தமாணிப்பிள்ளையாரின் பாதாரவிந்தங்களை வணங்கி நிற்போமாக.

ந.கந்தவனம், பொருளாளர்
நவாலி, சிந்தாமணிப்பிள்ளையார்


**சுதாஸ் ஸ்ரோஸ்**
புதினப் பத்திரிகை முகவர் பல்பொருள் வாணிபம்
அரசடி வீதி, நவாலி.

**ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ்**
சுத்தமான நல்லெண்ணெய் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டது
உரிமையாளர்கள்: ஆ.க.பசுபதிப்பிள்ளை
கே.என்.கந்தையா. மூத்தநாயனார் கோவில், தெற்குவீதி,
ஆனைக்கோட்டை

**கமலா ஸ்ரோர்ஸ்** பல்பொருள் வாணிபம்
சகலவிதமான பொருள்கள் நியாய விலைக்கு...
நவாலி றோட், ஆனைக்கோட்டை.


# இலங்கையில் யுத்த சூழ்நிலை குறித்து அமெ.காங்கிரஸ் சபையில் விவாதம்

### பொதுமக்களில் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் வலியுறுத்து

வாஷிங்டன்,ஏப்.23

இலங்கையில் இடம்பெற்று வரும் யுத்த சூழ்நிலை மற்றும் மனிதாபிமான நிலைவரங்கள் தொடர்பில் அமெரிக்க காங்கிரஸ் சபையில் விவாதம் ஒன்று நடைபெற்றுள்ளது.

விவாதத்தின்போது பலதரப்பட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் அப்பாவிப் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தவறியுள்ளதாக அமெரிக்க காங்கிரஸ் சபை உறுப்பனர் ஜிம் மெக்.கவர்ன் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிறுவனம், செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அப்பாவிப் பொதுமக்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதாக அவர் குறிப்பட்டுள்ளார். பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்கள் தற்போது இடம் நகர்ந்து வருவதாகவும் அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதில் சிக்கல் ஏற்படக் கூடும் எனவும் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான இலங்கை முகவர் அமின் அவாட் தெரிவித்தார்.

கடந்த பெப்ரவரி மாதம் முதல் இது வரையில் படுகாயங்களுக்கு உள்ளான 9000 பொதுமக்கள் கப்பல் மூலம் அழைத்து வரப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் மேலும் 50,000 முதல் 60,000 வரையிலான பொதுமக்கள் எஞ்சியிருக்கக் கூடும் எனவும் அவர் நம்பக்கை வெளியிட்டார். பொதுமக்கள் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு இலங்கையில் உடனடியாக மனிதாபிமான யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப்பட வேண்டும் என அவாட் தெரிவித்துள்ளார். யுத்தத்தில் ஈடுபட்டு வரும் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பாரதூரமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருவதாக மனித உரிமை கண்காணிப்பகத்தின் பிரதிநிதி அன்னா நய்ஸ்டாட் தெரிவித்தார்.

வன்னிப் பொதுமக்களின் நிலைமை நாளுக்கு நாள் மோசமான நிலையை அடைந்து வருவதாக அவர் சுட்டிக்காட்டினார். யுத்தப் பிரதேசப் பொதுமக்களுக்கு தேவையான உணவு, மருந்து மற்றும் ஏனைய அத்தியாவசிய சேவைகளை வழங்குவதற்கு யுத்த நிறுத்தம் அமுல் படுத்தப்பட வேண்டுமென மிரியம்யங் தெரிவித்தார்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் யுத்த வலயத்தில் சிக்கியுள்ள பொதுமக்களுக்கு தொண்டாற்ற அனுமதியளிக்கப்பட வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்தார். ஒபாமா அரசாங்கம் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி இலங்கையில் யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்த வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (50)


**யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் வ.து**

**ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் -2009**

காலம்: 25.04.2009 சனிக்கிழமை காலை 9மணி
இடம்: கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்
தலைமை: திரு.இ.அரிகரன் அவர்கள் (சங்கத் தலைவர்)

பிரதம விருந்தினர்
திரு பொ.சிவலிங்கம் அவர்கள்
(கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்)

சிறப்பு விருந்தினர்
திரு.அ.விமல்ராஜ்
(கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்)

குறிப்பு: சங்கத்தால் அனுப்பிவைக்கப்பட்ட அழைப்பிதழ்கள் கிடைக்கப் பெறாத அங்கத்தவர்கள் இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (சி/558168)

செ.ஜெயக்குமார்
செயலாளர்.

**காணி தேவை**
யாழ்/மாநகரசபை எல்லைக்குள் பிரதான வீதியில் 1 பரப்புக் காணி தேவை.
இடைத்தரகர் தேவையில்லை
தொடர்பு: 0771744581 (84621)

**வீடு வாடகைக்கு தேவை**
உயிரியற் பிரிவில் மகளிர் கல்லூரி யாழ்ப்பாணத்தில் கற்கும் இரு பிள்ளைகள், தாய், பாதுகாவலருக்கு படிக்க வீடு முழுமையாகவோ பகுதியாகவோ தேவை. தொடர்பு: 021 2224257



**அபிவிருத்தி அதிர்ஷ்டம்**
உத்தியோகபூர்வ முடிவுகள்

1081 நீலம்

வெற்றி இலக்கங்கள்

கடகம் 05 09 23 43

21-04-2009

செல்லுபடியாகும் தொடர் இல. 400048001 - 400066002

ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 192,798 | 20/- | 3,855,960/- |
| 2 இலக்கங்கள் | 17,657 | 40/- | 706,280/- |
| 1 இல. + லக்கினம் | 17,525 | 60/- | 1,051,500/- |
| 2 இல. + லக்கினம் | 1,573 | 200/- | 314,600/- |
| 3 இலக்கங்கள் | 466 | 1000/- | 466,000/- |
| 3 இல. + லக்கினம் | 34 | 10,000/- | 340,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,000,000/- | - |
| மொத்தம் | | | 7,134,340/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 230,060 | | 7,634,340/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,859,850/-

2009 ஏப்ரல் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| கேகாலை | 400054646-0-38 |
| களுத்துறை | 400055442-6-02 |
| கம்பஹா | 400061563-0-05 |
| மொனராகலை | 400052563-2-16 |
| நுவரெலியா | 400049841-4-04 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது தடவையாகவும் மழையால் வீழ்ந்தது பஞ்சாப்!

## தப்பிப்பிழைத்தது கொல்கத்தா

டர்பன், ஏப்.23

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் நேற்றுமுன்தினம் நடந்த கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்கு எதிரான முதலாவது ஆட்டத்தில் மழையின் குறுக்கீட்டால் டக்வொர்த்-லூவிஸ் விதிமுறைப்படி கொல்கத்தா அணி 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. கெய்லின் அதிரடி ஆட்டம் வெற்றிக்குத் துணையாக இருந்தது.

2ஆவது ஐ.பி.எல். ருவென்ரி 20 கிரிக்கெட் திருவிழா தென்னாபிரிக்காவில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 8 அணிகளும் மற்ற அணியுடன் தலா 2 முறை மோத வேண்டும். லீக் முடிவில் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணித் தலைவர் பிரன்டன் மக்கலம் முதலில் பஞ்சாப் அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தார். இதன்படி பஞ்சாப் அணி துடுப்பாட்டத்தை ஆரம்பித்தது. ஆரம்ப ஆட்டக்காரர்களாக ரவி போபராவும், கரன் கோயலும் களமிறங்கினார்கள். கரன் கோயல் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார். அடுத்து வந்த இர்பான் பதான் அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்துவதில் முக்கிய பங்கு வகித்தார்.

அதிரடியாக ஆடிய பதான் 17 பந்துகளில் 5 பவுண்டரி, ஒரு சிக்ஸருடன் 32 ஓட்டங்களை எடுத்த நிலையில் கங்குலியின் பந்து வீச்சில் ஆட்டம் இழந்து வெளியேறினார். பதானின் பிடியெடுப்பை எல்லைக்கோட்டுக்கு மிக அருகில் நின்றபடி முரளிகார்த்திக் சிறப்பாகப் பிடித்தார். ஒரு 'இஞ்சி' நகர்ந்திருந்தாலும் அப்பந்து சிக்ஸர் ஆகியிருக்கும். அதே ஓவரில் ரவி போபராவும் (15 ஓட்டங்கள்) ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் சங்கக்கராவும், யுவராஜ் சிங்கும் அணியைச் சரிவில் இருந்து மீட்டார்கள். சங்கக்கரா எதிர்பாராத விதமாக 26 ஓட்டங்களில் (24 பந்து, 2 பவுண்டரி) ரன்-அவுட் முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார். தனக்கே உரித்தான பாணியில் விளையாடிய அணித் தலைவர் யுவராஜ் சிங் 38 ஓட்டங்களில் (28 பந்து, 3 பவுண்டரி, 2 சிக்ஸர்) ஆட்டமிழந்தார். இறுதிக் கட்டத்தில் இலங்கை அணி வீரர் ஜெயவர்த்தனா கைகொடுத்ததால் பஞ்சாப் அணி 150 ஓட்டங்களைக் கடந்தது. நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை



நேற்றுமுன்தினம் நடந்த போட்டியில் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்திய கங்குலியை அணித் தலைவர் மக்கலம் கட்டித் தழுவிப் பாராட்டுகிறார்.

இழந்து 158 ஓட்டங்களைச் சேர்த்தது. ஜெயவர்த்தனா 31 ஓட்டங்களுடன் (19 பந்து, 3 பவுண்டரி, ஒரு சிக்ஸர்) கடைசி வரை களத்திலிருந்தார். கொல்கத்தா அணி தரப்பில் கங்குலி 2 விக்கெட்டுகளும், ஹென்ரிகிக்ஸ், திண்டா, இஷாந்த் ஷர்மா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

இதைத் தொடர்ந்து மக்கலமும், மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரர் கிறிஸ் கெய்லும் ஆரம்ப ஆட்டக்காரர்களாக களமிறங்கினர். மழை பெய்வதற்கான வாய்ப்பு இருப்பதை வீரர்கள் அறிந்ததால், வேகமாக ஓட்டம் குவிக்க வேண்டும் என்று திட்டமிட்டுச் செயற்பட்டனர். கெய்ல் 2 ஓட்டங்களில் இருந்தபோது கொடுத்த பிடியெடுப்பை, கரன் கோயல் தவறவிட்டார். இதற்கு பெரிய விலையை அவர்கள் கொடுக்க வேண்டியிருந்தது. கெய்ல் சிக்ஸரும், பவுண்டரியுமாக விளாசினார்.

வலுவான ஆரம்பத்தைப் பெற்ற கொல்கத்தா அணியின் ஓட்ட எண்ணிக்கை 57 ஓட்டங்களை எட்டியபோது, மக்கலம் ஆட்டமிழந்தார். அவர் 16 பந்துகளில் ஒரு பவுண்டரி, 2 சிக்ஸருடன் 21 ஓட்டங்களை எடுத்தார். அடுத்து பராட் ஹொட்ஜ் களம் கண்டார். இதன் பின்னர் கெய்ல் 32 ஓட்டங்களில் 2 ஆவது முறையாக கண்டத்தில் இருந்து தப்பினார். இந்த முறை துடுப்பு மட்டையில் பட்டபடி வந்த பந்தை விக்கெட் காப்பாளர் சங்கக்கார பிடியெடுக்கத் தவறிவிட்டார்.

கொல்கத்தா அணி 9.2 ஓவர்களில் ஒரு விக்கெட்டுக்கு 79 ஓட்டங்களை எடுத்திருந்தபோது மழை பெய்தது. அப்போது கெய்ல் 44 ஓட்டங்களுடனும் (26 பந்து, 2 பவுண்டரி, 4 சிக்ஸர்), ஹொட்ஜ் 10 ஓட்டங்களுடனும் (14 பந்து) களத்தில் இருந்தார்கள். உடனடியாக மழைவிடாததால் ஆட்டத்தின் முடிவை அறிய டக்வொர்த்-லூவிஸ் விதிமுறை பின்பற்றப்பட்டது. இதில் 9.2 ஓவர்களில் கொல்கத்தாவுக்கு 69 ஓட்டங்களே போதுமானதாக இருந்தது. எனவே 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கொல்கத்தா அணி வெற்றி பெற்றதாக நடுவர்கள் அறிவித்தனர்.

கொல்கத்தாவுக்கு இது முதல் வெற்றியாகும். முன்னதாக டெக்கான் அணியிடம் தோற்றிருந்தது. கெய்ல் ஆட்டநாயகன் விருது பெற்றார்.

இன்னும் வெற்றிக் கணக்கை தொடங்காத பஞ்சாப் அணிக்கு இது 2ஆவது தோல்வியாகும். முன்னதாக டில்லி டேர் டெவில்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தின் போதும் இதேபோன்று தான் மழை விளையாடியது. இதனால் ஓவர்கள் குறைக்கப்பட்டபோது டில்லி அணிக்கு இலக்கு எளிதாகிப் போய்விட்டது. இப்போது 2ஆவது முறையாகவும் அவர்களுக்கு மழை பாதிப்பை உண்டாக்கியிருக்கிறது.

ஆட்டம் முடிந்த பின்னர் பஞ்சாப் அணித் தலைவர் யுவராஜ் கூறுகையில், ''இது கொஞ்சம் துரதிர்ஷ்டவசமானது. நாங்கள் பந்துகளைப் பிடியெடுக்கத் தவறவிட்டதால், அவர்கள் எங்களைவிட ஓட்ட எண்ணிக்கையால் முன்னிலை பெற்றுவிட்டனர். எங்களது துடுப்பாட்டம் நன்றாக இருந்தது. ஆனால் பந்து வீச்சில் தான் இன்னும் முன்னேற்றம் காணவேண்டியுள்ளது'' - என்றார்.

கொல்கத்தா அணித் தலைவர் மக்கலம் கூறுகையில், ''இனிமையான முடிவு கிடைத்திருக்கிறது. இந்த வெற்றி எங்களது வீரர்களுக்கு நிச்சயம் உத்வேகத்தை தரும். இந்த ஆடுகளத்தில் 150 - 160 ஓட்டங்கள் போட்டி அளிக்கக்கூடிய ஓட்டஎண்ணிக்கையாக இருக்கும் என்று நினைத்தோம். ஆனால் கெய்ல் அதிரடியான தொடக்கம் தந்து, எங்கள் அணிக்கு சாதகமாக்கிவிட்டார். அவரது துடுப்பாட்டம் அருமையாக இருந்தது'' - என்றார்.




# ஹைடன், முரளியின் அபாரமான ஆட்டமே சென்னை அணியின் வெற்றிக்குக் காரணம்

## டோனி பாராட்டு

போர்ட் எலிசபத், ஏப்.23

பெங்களூர் அணிக்கு எதிரான வெற்றிக்கு மத்தியூ ஹைடன் மற்றும் முத்தையா முரளிதரன் ஆகியோர் தான் முக்கிய காரணம் என்று சென்னை அணியின் தலைவர் மகேந்திர சிங் டோனி பாராட்டுத் தெரிவித்துள்ளார். 2ஆவது ஐ.பி.எல். போட்டிகள் தென்னாபிரிக்காவில் நடைபெற்று வருகின்றன. இதில் போர்ட் எலிசபத்தில் கடந்த திங்கட்கிழமை சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் சென்னை அணி 92 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

முதலில் ஆடிய சென்னை அணி 5 விக்கெட் இழப்புக்கு 179 ஓட்டங்களைக் குவித்தது. மத்தியூ ஹைடன் அபாரமாக ஆடி 65 ஓட்டங்களைக் குவித்தார். 35 பந்துகளில் அவர் இந்த ஓட்டங்களை மின்னல் வேகத்தில் எடுத்தார். பிளின்ரொப் 22 ஓட்டங்களைக் குவித்தார்.

பின்னர் ஆடிய பெங்களூர் அணி 12.2 ஓவர்களில் 87 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதன் மூலம் சென்னை அணி 92 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. முதல் ஆட்டத்தில் தோல்வியடைந்த சென்னை அணி இதன் மூலம் முதல் வெற்றியைப் பெற்றுள்ளது.

சென்னை அணியின் சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சென்னை அணித் தலைவர் டோனி, ஹைடனின் அபார ஆட்டமும், முரளிதரனின் பந்து வீச்சுமே வெற்றிக்குக் காரணம் எனக் குறிப்பிட்டார்.

ஹைடன் தனது ஆட்டத்தின் மூலம் வெற்றிக்கு வழிவகுத்ததாகவும் முரளிதரன் தனது பந்து வீச்சின் மூலம் அதனை முடித்து வைத்ததாகவும் டோனி குறிப்பிட்டார்.

ராஜஸ்தான் அணியின் தலைவர் கெவின் பீற்றர்ஸன், மத்தியூ ஹைடனின் ஆட்டத்தை மிகவும் பாராட்டினார். ஹைடனின் ஆட்டம் தங்கள் அணியின் தோல்விக்கு வித்திட்டதாக அவர் தெரிவித்தார்.

முரளிதரன் இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக அறிவிக்கப்பட்டார். இந்தப் போட்டித் தொடரில் சுழற்பந்து வீச்சாளர்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இதற்கு முன்னர் நடைபெற்ற போட்டியில் பெங்களூர் அணியின் கும்ப்ளே 5 விக்கெட்டுகளை வீழ்த்தி ஆட்ட நாயகனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

# மும்பை – ராஜஸ்தான் போட்டி மழை காரணமாக ரத்து

டர்பன், ஏப். 23

மும்பை இந்தியன்ஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகளுக்கு இடையில் நேற்றுமுன்தினம் இரவு இலங்கை நேரப்படி 8 மணிக்கு நடைபெறவிருந்த போட்டி மழை காரணமாக நிறுத்தப்பட்டது.

ஐ.பி.எல். ருவென்ரி 20 தொடரின் 7ஆவது லீக் ஆட்டத்தில் சச்சின் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியை எதிர்த்து ஷேன் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி நேற்றுமுன்தினம் மோதவிருந்தது. டர்பன் கிங்ஸ் மீட் மைதானத்தில் தொடர்ந்து பலத்த மழை பெய்து வந்தது. இதையடுத்து, போட்டியை ரத்து செய்வதாக நடுவர்கள் அறிவித்தனர். 2 அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது.

மும்பை இந்தியன்ஸ் தனது முதல் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸை வீழ்த்தியது. எனினும் நடப்பு சம்பியன் ராஜஸ்தான் ரோயல்ஸ் தனது முதல் ஆட்டத்தில் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியிடம் அதிர்ச்சித் தோல்வியுற்றது.

புள்ளிப் பட்டியலில் மும்பை இந்தியன்ஸ் 3 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது.

# சௌரவ் கங்குலி நீக்கம் ஷாருக்கான் விளக்கம்!

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் தலைவர் பதவியிலிருந்து கங்குலி நீக்கப்பட்டமை தொடர்பாக அந்த அணியின் உரிமையாளரும், நடிகருமான ஷாருக்கான் நேற்றுமுன்தினம் டர்பனில் கூறியவை வருமாறு:-

கொல்கத்தா அணியின் தலைவர் பொறுப்பில் இருந்து கங்குலி நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக மக்கலம் நியமிக்கப்பட்டது, அணியின் நலனுக்காக எடுக்கப்பட்ட முடிவு. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து எனக்கு வினோதமான வெறுக்கத்தக்க ஈ-மெயில்கள் மக்களிடம் இருந்து வந்துள்ளன. இவற்றை நான் சேகரித்து வைத்துள்ளேன். ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று என்னால் விளக்கம் அளிக்க முடியும். நாங்கள் தவறு செய்வதாக நீங்கள் உணர்ந்தால், அதனைச் சுட்டிக்காட்டி எங்களை ஊக்கப்படுத்தும் விதமாக ஈ-மெயில்களை அனுப்புங்கள்.

சினிமாத்துறையைச் சேர்ந்தவன் உரிமையாளராக இருப்பதாலும், தீவிர கிரிக்கெட் மோகம் கொண்ட கொல்கத்தாவை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அணி என்பதாலும் எங்கள் அணி அதிகமாக கவனிக்கப்படுகிறது. இதனால் நாங்கள் மிகுந்த நெருக்கடிக்குள்ளாகியிருக்கிறோம்.

நல்லதோ கெட்டதோ, கொல்கத்தா ரசிகர்கள் ஒரு இரவு எங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். மற்றொரு இரவு எங்களது முடிவை எதிர்த்து தங்களது கோபத்தை வெளிப்படுத்துவார்கள். ஆனால் உங்களது கனவான ஐ.பி.எல். கோப்பையுடன் கொல்கத்தாவுக்கு வந்து உற்சாகமாக ஆட்டம் போடுவேன் என்று உறுதி அளிக்கிறேன்.

நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றிருப்பதால் நிம்மதி அடைகிறேன். சிறந்த முறையில் இந்த வெற்றி கிடைத்திருக்கிறது - என்று உறுதியாக சொல்ல முடியவில்லை. இருப்பினும் வெற்றி வெற்றி தான் - என்றார்.

# கில்கிறிஸ்ட் விளாசும் ஒவ்வொரு சிக்ஸருக்கும் ஊனமுற்ற குழந்தைகளுக்கு விசேட சைக்கிள்!

டர்பன், ஏப். 23

ஐ.பி.எல்., தொடரில கில்கிறிஸ்ட் விளாசும் 'சிக்ஸர்' மூலம் ஊனமுற்ற குழந்தைகள் பயன்பெறவுள்ளனர். இவரது ஒவ்வொரு சிக்ஸருக்கும் ஊனமுற்ற குழந்தைகளுக்கான விசேடமாக வடிவமைக்கப்பட்ட சைக்கிள் ஒன்று பரிசாக வழங்கப்படும். இம்முறை 25 சிக்ஸர் அடித்து 25 ஊனமுற்ற குழந்தைகளுக்கு உதவ இலக்கு நிர்ணயித்துள்ளார் அவுஸ்திரேலியாவின் நட்சத்திர விக்கெட் காப்பாளர் மற்றும் அதிரடி துடுப்பாட்ட வீரர் கில்கிறிஸ்ட்.

ஓய்வுக்குப் பின் ஐ.பி.எல்., டெக்கான் சாஜ்ஜர்ஸ் அணியின் தலைவராக உள்ளார். தற்போது தென்னாபிரிக்காவில் நடக்கும் ஐ.பி.எல்., ருவென்ரி 20 தொடரில் இவர் அடிக்கும் ஒவ்வொரு சிக்ஸருக்கும் ஒரு ஊனமுற்ற குழந்தைக்கு பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட சைக்கிள் ஒன்று பரிசாக வழங்கப்படும்.

இதனை ஆம்வே மற்றும் ஊனமுற்றோர்க்கான தொழில்நுட்ப உதவி அளிக்கும் நிறுவனம் ஆகியன இணைந்து வழங்குகின்றன. இது குறித்து ஆம்வே செய்தித் தொடர்பாளர் மிகாயல் கோல்ட்வெல் கூறுகையில்,

''கில்கிறிஸ்ட் உடன் இணைந்து செயற்படுவது மகிழ்ச்சி அளிக்கிறது. ஊனமுற்றோரின் சேவைக்குக் கில்கிறிஸ்ட் தொடர்ந்து ஆதரவு அளித்து வருகிறார். ஊனமுற்ற குழந்தைகளுக்கென பிரத்தியேகமாக இந்தச் சைக்கிள் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனால் எவ்விதமான பிரச்சினையும் இல்லாமல் ஊனமான குழந்தைகள் இந்த சைக்கிளை பாவிக்கலாம்'' - என்றார்.

கில்கிறிஸ்ட் கூறுகையில், ''மூன்று குழந்தைகளுக்கு அப்பா என்ற முறையில், சைக்கிள் ஓட்டுவது குழந்தைகளுக்கு எவ்வளவு மகிழ்ச்சியான விடயம் என்பதை அறிவேன். இம்முறை நான் அடிக்கும் ஒவ்வொரு சிக்ஸரும் ஒரு ஊனமுற்ற குழந்தைக்கு உற்சாகத்தைத் தரும். எனவே, குறைந்தபட்சம் 25 சிக்ஸர்கள் அடிக்க முயல்வேன்'' - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர் பிரச்சினையில் ஐ.நாவின் தலையீட்டைத் தடுக்க இந்தியா முயற்சி

## குற்றஞ்சாட்டுகிறார் வைகோ



சென்னை, ஏப். 23

இலங்கையில் போரை நிறுத்துவதில் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டைத் தடுப்பதற்கான முயற்சியில் இந்தியா ஈடுபட்டுள்ளது - என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

வன்னியில் கடந்த திங்கட்கிழமை மட்டும் 1,400 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். காயமுற்றோருக்கு உணவு, மருந்து எதுவும் இல்லை. சிகிச்சை கிடைக்காமல் மேலும் பலர் சாகின்றனர்.

மீதமுள்ள தமிழர்களையும் மொத்தமாகக் கொன்று குவிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை முன்கூட்டியே தெரிந்து கொண்ட தமிழக முதல்வர் கருணாநிதி, அதனால் தமிழகத்தில் ஏற்படும் எதிர் விளைவுகளை அறிந்துள்ளார். அதனால்தான் பிரபாகரன் கொல்லப்பட்டால் நான் வருந்துவேன் எனக் கூறியுள்ளார்.

ஐ.நா. சபையின் பாதுகாப்புக் கவுன்ஸில் கூட்டம் புதன்கிழமை கூடவுள்ளது. ஐ.நா. பாதுகாப்புக் கவுன்ஸில் மூலம் இலங்கைப் போரை நிறுத்த முடியும். ஏற்கனவே கொசோவா, கிழக்கு தைமூர் ஆகிய நாடுகளில் அவ்வாறுதான் போர் நிறுத்தப்பட்டது.

அதேபோல் இலங்கையில் போரை நிறுத்துவதற்கான தீர்மானத்தைக் கொண்டுவர இங்கிலாந்து அரசு முடிவு செய்துள்ளது. அமெரிக்கா, பிரான்ஸ் ஆகியவை அத் தீர்மானத்துக்கு ஆதரவளிக்க முடிவு செய்துள்ளன. ஆனால் அத் தீர்மானத்தை நிறைவேற்ற விடாமல் தடுக்கும் முயற்சியில் இந்திய அரசு ஈடுபட்டு வருகிறது.

தீர்மானத்துக்கு இசைவு அளிக்கக் கூடாது என ரஷியாவையும், சீனாவையும் இந்தியா வற்புறுத்தி வருகிறது.

ஆனால் அதையும் மீறி இப்பிரச்சினையில் ஐ.நா. பாதுகாப்புக் கவுன்ஸில் தலையிட வேண்டும். அப்போதுதான் ஈழத் தமிழ் மக்களைக் காப்பாற்ற முடியும். உலகெங்கும் உள்ள தமிழர்கள் உள்ளம் பதறித் துடிக்கின்றனர். அழுது புலம்புகின்றனர். எனவே இலங்கையில் போரை நிறுத்த இந்த நேரத்திலாவது இந்தியா ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லையெனில் விபரீதமான விளைவுகள் ஏற்படும்.

எதிர்காலத்தில் இந்திய ஒருமைப்பாடு தூள் தூளாகும் - என்றுள்ளது.

# சோனியா, மன்மோகனுக்கு கருணாநிதி மீண்டும் தந்தி

இலங்கையில் தமிழர்கள் மீதான தாக்குதலை நிறுத்தி, அங்குள்ள தமிழர்களைக் காப்பாற்ற - நிரந்தரத் தீர்வை ஏற்படுத்த இலங்கை அரசுக்கு இறுதி எச்சரிக்கை விடவேண்டும் - என்று கூறி பிரதமருக்கு முதல்வர் கருணாநிதி மீண்டும் அவசரத் தந்தி அனுப்பியுள்ளார்.

இதுகுறித்து பிரதமர் மன்மோகன் சிங், சோனியா காந்தி, வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோருக்கு கருணாநிதி நேற்றுமுன்தினம் அனுப்பியுள்ள தந்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கையில் உள்ள மக்கள் மிக மோசமான, இக்கட்டான நிலையில் உள்ளனர் என்பதை அங்கு நடந்துவரும் போர்ச் சூழல், அபாய அறிவிப்பாகத் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட அனைத்து நாடுகளும் இலங்கையில் உடனடியாக போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்று இலங்கை அரசை வற்புறுத்த வேண்டும்.

இலங்கையில் நிரந்தர தீர்வு ஏற்படவும், இலங்கையில் உள்ள தமிழ் மக்களை காப்பாற்றவும் பிரதமர் மன்மோகன்சிங், சோனியா காந்தி, வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோர் இலங்கை அரசுக்கு இறுதி எச்சரிக்கை விடுக்க வேண்டும் - என்றுள்ளது.

# ஈழத் தமிழருக்கு ஆதரவாக தமிழ்த் திரையுலகமும் இன்று மாபெரும் போர்!



சென்னை, ஏப். 23

ஈழத் தமிழர்கள் படுகொலையை கண்டித்து திரையுலக தமிழீழ ஆதரவு இயக்கம் சார்பிலும் இன்று தமிழகத்தில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இதுகுறித்து இயக்குநர் பாரதிராஜா வெளியிட்ட அறிக்கை வருமாறு -

சென்னை பிலிம்சேம்பர் வளாகத்தில் காலை 9 மணி முதல் தொடர் கண்டன போராட்டம் நாளை (இன்று) நடைபெற உள்ளது. இது தமிழின படுகொலையைத் தடுத்து நிறுத்தக் கோரும் இறுதிப் போராட்டமாகும்.

இயக்குநர்கள் சங்கம் இதில் பங்கேற்கிறது. இப்போராட்டத்துக்கு மற்றத் திரைப்பட சங்கங்களும் ஆதரவு தெரிவித்துள்ளன. மற்ற அமைப்புகளைச் சேர்ந்தவர்களையும் இதில் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறோம் - என்றுள்ளது.

# வன்னியில் மடிந்த தமிழருக்காக நாளை தமிழகமெங்கும் கறுப்புக்கொடி அஞ்சலி!

## பழ. நெடுமாறன் அறிவிப்பு

சென்னை, ஏப். 23

ஈழத்தில் நடக்கும் மனிதப் பேரழிவைத் தடுத்து நிறுத்த மத்திய அரசு முன்வராதமையைக் கண்டித்தும், அங்கு கொல்லப்பட்ட தமிழர்களுக்கு அஞ்சலி செலுத்தும்வகையிலும் தமிழ்நாடு முழுவதும் நாளை கறுப்புக்கொடி ஊர்வலங்கள் நடத்த வேண்டும்.

- இவ்வாறு இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் அறிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கையில் வன்னியின் பாதுகாப்பு வலயப்பகுதியில் இருந்து வெளியேறிய ஆயிரக்கணக்கான தமிழர்களை பணயக் கைதிகளாக முன்னிறுத்தி நடத்தப்பட்ட தாக்குதலில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். மக்கள் வசிக்கும் பகுதிகளில் தொடர்ந்து கொத்துக் குண்டுகளை வீசி கொடூரத் தாக்குதல் நடத்தப்படுகிறது.

இந்த மனித பேரழிவைத் தடுத்து நிறுத்த மத்திய அரசு முன்வராதமையைக் கண்டித்தும், கொல்லப்பட்ட தமிழர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் வரும் 24 ஆம் திகதி (நாளை) மாலை 4 மணி முதல் 6 மணி வரை தமிழ்நாடு முழுவதும் கறுப்புக்கொடி ஊர்வலங்கள் நடத்த வேண்டும். சரியாக மாலை 6 மணிக்கு அனைவரும் ஒன்றுகூடி அமைதி அஞ்சலி செலுத்த வேண்டும். அமைதி அஞ்சலி செலுத்தும் நேரத்தில் அனைத்து போக்குவரத்தையும் நிறுத்தி, அவரவர்கள் இருந்த இடத்தில் இருந்தும், வீடுகளில் இருப்பவர்கள் வீட்டுக்கு உள்ளேயும் 5 நிமிட நேரம் அஞ்சலி செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றுள்ளது.

# இலங்கையில் தமிழினப் படுகொலை: உலகில் எங்கும் நடந்திராத கொடூரம்!

## கண்டிக்கிறார் அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா

சென்னை, ஏப். 23

இலங்கையில் போரை நிறுத்துமாறு மத்திய அரசுக்கு கருணாநிதி கொடுக்கும் தந்திகளால் எந்தப் பயனும் இல்லை. இது போன்ற இனப்படுகொலை உலகத்தில் எங்குமே நிகழ்ந்ததில்லை என்று சொல்லும் அளவுக்கு நிலைமை மோசமடைந்திருக்கிறது - என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கையில் பாதுகாப்பு வலயத்தில் சிக்கியிருக்கும் தமிழர்கள் அனைவரும் மிருக வெறி கொண்டு தாக்கப்பட்டு வருகின்றனர். அங்கே தமிழ் இனமே அழிந்து கொண்டிருக்கிறது என கவலை தரும் செய்திகள் நாள்தோறும் வந்து கொண்டிருக்கின்றன.

இதுபோன்ற இனப்படுகொலை உலகத்தில் எங்குமே நிகழ்ந்ததில்லை என்று சொல்லும் அளவுக்கு நிலைமை மோசமடைந்திருக்கிறது. இதுபோன்ற சூழ்நிலையில் முதல்வர் கருணாநிதி தெளிவான முடிவை, தைரியமாக எடுக்காமல் இருப்பது வேதனை அளிக்கிறது.

மீண்டும் மீண்டும் தந்தி கொடுப்பது தான் கருணாநிதிக்கு தெரிந்த ஒரே தீர்வு போலும்.

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும். அதை இந்திய அரசு உடனடியாகச் செய்ய வேண்டும். அதற்கு தமிழக முதல்வரின் பங்கு என்ன என்பதுதான் எல்லோரும் கேட்கும் கேள்வி. இந்த நேரத்திலாவது கருணாநிதி ஒரு முதல்வராக செயற்பட்டு மத்திய அரசை நிர்ப்பந்திக்க வேண்டும். எஞ்சியுள்ள தமிழர்களைக் காப்பாற்ற முன்வர வேண்டும். இல்லையெனில் வரலாறு எப்படி அவரை மன்னிக்கும் என ஜெயலலிதா கூறியுள்ளார்.

# போரை நிறுத்த இந்நிமிடம் தவறினால் ஈழத் தமிழினத்தைக் காக்க முடியாது!

## இந்திய அரசை கருணாநிதி அசைக்க வேண்டும் என்கிறார் ராமதாஸ்

தமிழர்கள் பேரழிவைத் தடுக்க இந்திய அரசை அசைக்கும் முடிவை முதல்வர் கருணாநிதி எடுக்க வேண்டும். இந்த நிமிடம் தவறினால், இனி ஈழத் தமிழினத்தைக் காக்க முடியாமலேயே போய்விடும் - என்று பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் கதறியுள்ளார்.

இதுகுறித்து நேற்றுமுன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இராணுவ நடவடிக்கையால் வன்னிப் பகுதியில் ரத்த ஆறு ஓடும் என்று மனித உரிமைகள் காப்பகம் எச்சரித்துள்ளது. பாதுகாப்பு வலயம் என்று அரசு அறிவித்த இடத்திலேயே தாக்குதல் நடக்கிறது.

தமிழ் இனம் அழிக்கப்பட்டாலும் போர் நிறுத்தம் பற்றி இந்திய அரசு வாய் திறக்கவில்லை. இந்திய பேரரசின் மனசாட்சியை தமிழக மக்கள் தட்டி எழுப்ப வேண்டும் என்பது ஈழத்தமிழர்கள் மட்டுமின்றி, உலகெங்கும் பரவிக் கிடக்கும் தமிழர்களின் ஏகோபித்த எதிர்பார்ப்பாகும்.

தமிழர்கள் பேரழிவைத் தடுக்க இந்திய அரசை அசைக்கும் முடிவை முதல்வர் கருணாநிதி எடுக்க வேண்டும். இந்திய அரசை செயற்பட வைக்க வேண்டும். இந்த நிமிடம் தவறினால், இனி ஈழத்தமிழினத்தை காக்க முடியாமலேயே போய்விடும் - என்றுள்ளது.

# இலங்கைத் தமிழர் நிலை குறித்து காங். ஆழ்ந்த கவலை தெரிவிப்பு

புதுடில்லி, ஏப். 23

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் உயிரிழப்பதைத் தடுக்க போரை நிறுத்துமாறு இலங்கை அரசுக்கு இந்திய அரசு வேண்டுகோள் விடுக்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி விருப்பம் தெரிவித்துள்ளது.

- இவ்வாறு காங்கிரஸின் செய்தித் தொடர்பாளர் ஜெயந்தி நடராஜன் டில்லியில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

போரை நிறுத்துமாறு இலங்கை அரசுக்கு இந்தியா இறுதி எச்சரிக்கை விடுக்க வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி கோரியுள்ளார். இந்நிலையில் காங்கிரஸ் கட்சியின் நிலை என்ன என்று கேட்டபோது, இந்தப் பதிலை ஜெயந்தி நடராஜன் தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

இலங்கைத் தமிழர்களின் நிலை குறித்து காங்கிரஸ் கட்சி கவலை அடைந்துள்ளது; அவர்களுக்குத் தேவைப்படும் மருந்துகள், உணவுப் பொருள்கள் ஆகியவற்றை அனுப்ப ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

போரை உடனடியாக நிறுத்தினால்தான் அப்பாவித் தமிழர்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல முடியும் - என்றார்.

# பிரபாகரனை இந்தியா மன்னிக்காது

## பிரியங்கா ஆவேசம்

அமேதி, ஏப். 23

எனது தந்தை ராஜீவ் காந்தியை கொன்றமைக்காக விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை இந்திய நாடு மன்னிக்காது - என்று பிரியங்கா காந்தி நேற்று முன்தினம் ஆவேசம் வெளியிட்டார்.

எனினும் எனக்கோ எங்களது குடும்பத்தினருக்கோ ராஜீவ் காந்தியைக் கொன்றவர்கள் மீது கோபமோ வெறுப்போ இல்லை. எமது தனிப்பட்ட துக்கம், வேதனை வேறு; அரசியல் என்பது வேறு - என்றும் அவர் தெரிவித்தார்.

அப்போது, பிரபாகரன் தீவிரவாதி அல்லர்; அவர் எனது நண்பர் என்று கருணாநிதி கூறினார் என வந்த செய்தி குறித்து செய்தியாளர்கள் கேட்டதற்கே அவர் இதனைக் கூறினார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

பிரபாகரனையோ அவரது இயக்கத்தையோ பிறர் பாராட்டுவது எங்களுக்கு எந்த வேதனையையும் ஏற்படுத்திவிடாது.

[illegible] வேறு, வெளியானது வேறு. [illegible] முழுமையாக ரி.வி. வெளியிடவில்லை என்று முதல்வர் கருணாநிதி சொன்னதையும் கவனத்தில்கொள்ள வேண்டும்.



வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் ராஜீவ் கொலை வழக்கு குற்றவாளி நளினியை சந்தித்துப் பேசியதை நான் ஓர் அனுபவமாக வே பார்க்கிறேன். அவரைச் சந்தித்து தெரிந்து கொண்டவை ஏராளம்.

இந்தியாவிடம் பிரபாகரனை இலங்கை ஒப்படைத்தால் அவருக்கு என்ன தண்டனை கொடுக்க விரும்புவீர்கள் என்று கேட்டதற்கு இந்தப் பிரச்சினை, அரசியலும் தனிப்பட்ட விவகாரமும் கலந்தது. எமது குடும்பத்தாருக்கு கோபம் இல்லையென்றாலும் இந்திய நாடு அவரை மன்னிக்காது. ராஜீவ் கொல்லப்பட்டதை அரசியல் கண்ணோட்டத்தில் என்னால் முழுமையாகப் புரிந்து கொள்ளமுடிகிறது - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வன்னியிலுள்ள பாதுகாப்பு வலயத்தில் நேற்று இடம்பெற்ற தாக்குதல்களில் கொல்லப்பட்ட, காயமடைந்த பொதுமக்கள் சிலரின் படங்களைக் காணலாம்.

# மக்கள் சுதந்திரமாக வெளியேற புலிகளுக்கு சர்வதேசம் அழுத்தம் கொடுக்க வேண்டும்

## ஜெனீவா சர்வதேச மாநாட்டில் அமைச்சர் டக்ளஸ்



ஜெனீவா, ஏப்.23

அப்பாவிப் பொதுமக்கள் சுதந்திரமாக வெளியேறி அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வருவதற்கு, புலித் தலைமையேதடையாக இருந்து வருகின்றது. இது குறித்து சர்வதேச நாடுகள் அனைத்தும் விடுதலைப் புலிகளுக்கு அழுத்தம் கொடுத்து எமது மக்களின் சுதந்திரமான வெளியேற்றத்துக்கு உதவ வேண்டும். அவலப்படும் மக்களின் சார்பில் இந்த வேண்டுகோளை சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

இனரீதியாகவும் கல்வி மற்றும் வறுமை ரீதியாகவும் உருவாகிவரும் பாகுபாடுகளை நீக்கி அவற்றை உறுதிப்படுத்தும் முகமாக ஜெனீவாவில் நடைபெறும் சர்வதேச மாநாட்டில் பேசுகையில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேற்படி மாநாட்டில் மேலும் தெரிவித்ததாவது:

இன்னமும் எஞ்சியிருக்கின்ற புலித் தலைமையின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து வன்னி வாழ் எமது மக்கள் வெளியே வருவதற்கு எத்தனித்து வருவதாகவும், ஆனால் புலித்தலைமையே எமது மக்களின் சுதந்திரமான வெளியேற்றத்தைப் பலாத்காரமாகத் தடுத்து நிறுத்தி வருகிறது.

அமைச்சர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசு ஆட்சிக்கு வந்திருந்த போது அமைதிப் பேச்சு வார்த்தை மூலம் அரசியலுரிமைப் பிரச்சினைக்கு தீர்வு காணத் தாம் விரும்புவதாக பகிரங்க அழைப்பினை புலித்தலைமையை நோக்கி விடுத்திருந்தார். ஆனாலும் அரசியல் உரிமை தீர்வுக்கான சந்தர்ப்பத்தினைப் புலித் தலைமை திட்டமிட்ட வகையில் சரிவர பயன்படுத்த மறுத்ததன் காரணத்தாலேயே இன்றைய யுத்தச்சூழல் தோன்றியிருக்கிறது.

இதனால் அப்பாவி மக்களே அவலங்களை சந்திக்க வேண்டிய துயரங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. வன்னி மண்ணை முற்றாக விடுவிக்கும் படை நடவடிக்கையின் போது அப்பாவிப் பொது மக்கள் கணிசமான அளவினர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருந்து ஏற்கனவே புலித்தலைமையின் தடைகளை மீறி வந்திருக்கின்றனர். எஞ்சியிருக்கும் ஏனைய மக்களும் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வருவதற்கு விருப்பம் கொண்டுள்ளனர்- என்று தெரிவித்தார்.

(அ)

# அல்லாரையில் புதிய நீரூற்று

யாழ்ப்பாணம், ஏப்.23

அல்லாரை பூங்கொடி பிள்ளையார் ஆலய வீதியில் புதிய நீரூற்றுஒன்று தோன்றியுள்ளது.

நிஷா புயல் அனர்த்தத்தின் போது சிறு குழி போல் இது காணப்பட்டதாகவும் இதிலிருந்து நீர் தினமும் வெளியேறி வந்ததை அடுத்து நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் நீரை வெளியே எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன எனினும் நீர் வற்றாத நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆலய வீதியில் ஏற்பட்ட இந்த நீரூற்றினைப் பெருமளவு பொதுமக்கள் பார்வையிட்டு வருகின்றனர். (04-227)

# டாக்டரின் கொலையைக் கண்டித்து வவுனியாவில் நேற்று பகிஷ்கரிப்பு!

கொழும்பு, ஏப்.23

வவுனியா பொது வைத்தியசாலையின் பெண் நோயியல் மருத்துவ நிபுணர் மொகமட் சுல்தான் மீரா மொகிதீனின் (வயது-52) கொலையைக் கண்டித்து நேற்று வவுனியா வைத்திய சாலையைச் சேர்ந்த வைத்தியர்கள், தாதியர் மற் றும் பணியாளர்கள் ஒரு மணி நேர அடையாள பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வவுனியா கிளையினர் இதற்கான அழைப்பை விடுத்திருந்தனர். வவுனியா வைத்தியசாலைக்கு எதிரில் பிரதான வீதியில் கண்டன வாசகங்கள் அடங்கிய பதாதைகளையும், மருத்துவ நிபுணரின் மறைவுக்கான அஞ்சலி வாசகங்கள் அடங்கிய பதாதையையும் தாங்கியவாறு அவர்கள் அமைதியான பகிஷ்கரிப்பல் ஈடுபட்டனர்.

இந்தப் பகிஷ்கரிப்பு நடவடிக்கையின் போது, இராணுவத்தினர் பாதுகாப்பு வழங்கியிருந்தனர்.

தமது சக வைத்திய அதிகாரி கொல்லப்பட்டதையடுத்து, தமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பது குறித்து இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகளுடன் இவர்கள் பேச்சு நடத்தினர். அதற்கான உத்தரவாதத்தை அவர்கள் வழங்கியிருக்கின்றன என அடையாள பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்த வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ-சி)

# தஞ்சமடைந்த மக்களுக்கு உதவ கடற்படையினர் நடவடிக்கை

## கடற்படைப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.23

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து இராணுவத்தினரின் கட்டுப் பாட்டுப் பகுதிக்கு வரும் மக்களின் நலன்கருதி கடற்படையினர் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனக் கடற்படைப் பேச்சாளர் டி.கே.பி. தஸாநாயக்க நேற்று பாதுகாப்பு அமைச்சகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த இரு நாள்களில் கடற்படையினரிடம் 5,000இற்கு மேற்பட்ட மக்கள் தஞ்சமடைந்துள்ளனர். இவ்வாறு தஞ்சமடையும் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்ல எமக்கு ஆறு மணிநேரம் தேவைப்பட்டது.

புலிகளின் 100இற்கு மேற்பட்ட தற்கொலைப் படகுகள் தாக்குதல்களை நடத்த வரும் போது, பலவிதமான சிக்கல்களைக் கடற்படையினர் எதிர்நோக்க வேண்டியேற்படுகின்றது. இது தொடர்பில் பல யுக்திகளைக் கடற்படையினர் கையாள்வதுண்டு.

கடல் வழியாகத் தப்பிவரும் மக்களில் காயமடைந்தவர்களின் நலன் கருதி மருத்துவ மற்றும் உணவு உட்பட அத்தியாவசிய வசதிகள் புல்மோட்டை கடற்தளத்தில் செய்யப்பட்டுள்ளன.

விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்படும் எந்தத் தாக்குதலையும் எதிர்க்கக் கூடிய வகையில் கடற்படையினர் தயாரான நிலையிலேயே உள்ளனர் - என்றார். (04)

# இராணுவ நடவடிக்கைகளுக்கு விமானப் படையும் உதவி என்கின்றார் அதன் பேச்சாளர் ஜனக்க

கொழும்பு, ஏப்.23

புதுமாத்தளன் பகுதியில் படையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளுக்கு விமானப்படையினர் கண்காணிப்பு வழங்கி உதவி வருகின்றனர்.

இது தொடர்பிலான காணொளிகள், புகைப்படங்கள் என்பன ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்டும் தரவேற்றப்பட்டும் இருந்தன - என விமானப்படைப் பேச்சாளர் ஜனக்க நாணயக்கார தெரிவித்தார். நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பேசிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"கடந்த 20ஆம் திகதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து மக்கள் வந்த போது, இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் காயமடைந்த 238 சிவிலியன்கள் விமானப்படையினரின் உதவியுடன் அநுராதபுர வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இடம்பெயர்ந்து வந்துள்ள மக்களுக்காக உணவுப் பொருள்களையும் அநுராதபுரத்திலிருந்து விமானபடையினர் கொண்டு வந்துள்ளனர். இன்று (அதாவது நேற்று) கொழும்பு விமானப்படைத் தளத்திலிருந்து சில அத்தியாவசியப் பொருள்கள் கிளிநொச்சிக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன - என்றார். (சி)

# 28 கோயில்களை இடம்மாற்ற மலேஷியாவில் நடவடிக்கை

கோலாலம்பூர், ஏப். 23

மலேஷியாவின் தலைநகரான கோலாலம்பூரில் சர்ச்சைக்குரிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள 28 கோயில்கள் அகற்றப்பட்டு, அடுத்த மாதம் மாற்று இடங்களில் அமைக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

இந்த 28 கோயில்களின் காப்பாளர்கள், மாற்று இடங்களை ஏற்றுக்கொண்டுள்ளனர். எனினும், செடாபாக் என்னுமிடத்தில் அமைந்துள்ள முனீஸ்வரர் கோயில் குழு உறுப்பினர்கள் மாத்திரம் மாற்று இடத்தை ஏற்க மறுத்துள்ளனர்.

இவ்வாறு மாற்று இடத்தை ஏற்க மறுப்பவர்களுக்குப் புதிய இடத்தைத் தேர்வு செய்வதற்காக 30 நாள்கள் கால அவகாசம் வழங்கப்படும். பின்னர் தெரிவான மாற்று இடம் கொடுக்கப்படும். இதைத் தொடர்ந்து தற்போதைய கோயில் இடிப்புப் பணி தொடங்கப்படும் எனத் தமிழர் தலைவர் சரவணன் தெரிவித்துள்ளார்.

2007 ஆம் ஆண்டு, அதிகாரிகளால் கோயில் ஒன்று இடிக்கப்பட்டமைக்கு ஆட்சேபனை தெரிவித்தே மலேஷியவாழ் இந்திய வம்சாவளியினரால் அவ்வாண்டு பேரணிப் போராட்டமொன்றும் நடத்தப்பட்டுள்ளது.

(சி)

# தமிழகத்தில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோருக்கு முதலமைச்சர் கருணாநிதி அவசர தந்தி அனுப்பினார். இந்த நிலையில், இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட மத்திய அரசை வற் புறுத்தி தமிழ்நாடு முழுவதும் இன்று வேலை நிறுத்தம் நடைபெறும் என்று தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான கருணாநிதி அறிவித்தார்.

நான் இன்று எழுதியுள்ள உடன்பிறப்புகளுக்கான கடிதத்தைத் தொடர்ந்து இலங்கை அரசுக்கு நமது கண்டனத்தைத் தெரிவிக்கவும், ஈழத்தில் மாண்டு மடிந்து கொண்டிருக்கின்ற தமிழர்களைக் காப்பாற்றவும் மத்திய அரசு ஒரு நொடியும் தாமதிக்காமல், இலங்கையில் போர்நிறுத்தத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்வதற்காக, தி.மு.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும், கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட நிலையில், தமிழ் பெருங்குடி மக்கள் அனைவரும் அவர்களாகவே முன்வந்து (23.04. 2009) வியாழக்கிழமை காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை அமைதியான முறையில் வேலைநிறுத்தத்தில் ஈடுபடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இது இலங்கை அரசுக்கான கண்டனம் மாத்திரமல்ல, இலங்கையில் செத்துக் கொண்டிருக்கிற தமிழ் இனத்துக்காக விடுகின்ற கண்ணீரும் கூட என்கிற உணர்வோடு இந்த வேலைநிறுத்தத்தில் அனைவரும் கலந்து கொள்ள மீண்டும் வேண்டுகிறேன்- இவ்வாறு அந்த அறிக்கையில் கருணாநிதி கூறியுள்ளார். வேலைநிறுத்தம் நடைபெறும் 23 ஆம் திகதியன்று படப்பிடிப்பு உள்ளிட்ட சினிமா சம்பந்தப்பட்ட அனைத்து வேலைகளும் நடைபெறாது என்று தமிழ் தின.ரப் படத் தயாரிப்பாளர்கள் சங்கத் தலைவர் ராம. நாராயணன் கூறினார்.

(அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பாதுகாப்பு வலயம் மீது நேற்று நடத்தப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்ட பொதுமக்களின் படங்கள்

# வன்னியில் உள்ள மக்களைச் சந்திப்பதற்கு ஜனாதிபதி சகல கட்சி உறுப்பினர்களையும் அங்கு கூட்டிச் செல்வாரா?

## சவால் விடுகிறார் எதிர்க்கட்சித் தலைவர்

''ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கிளிநொச்சி சென்றுவர முடியுமென்றால்- அவருக்கு தமிழ் மக்கள் மீது அக்கறை இருக்குமென்றால்- எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முதல் (அதாவது நாளை) சகல அரசியல் கட்சிகளினதும் உறுப்பினர்களை ஒன்று கூட்டி அங்குள்ள மக்களை அவர்கள் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யட்டும் பார்க்கலாம்.''

-இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிக்கு சவால் விடுத்துள்ளார்.

மேல் மாகாணசபைத் தேர்தலுக்கான ஐ.தே.கவின் இறுதிப் பிரசாரக் கூட்டம் கம்பஹா, கிராண்ட்பாஸ் பலாமரத்தடிச் சந்தி ஆகிய இடங்களில் நேற்று இடம்பெற்றது. அங்கு கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு-

**வன்னி அவலங்களைச் சபையில் அறிவிப்பதில்லை**

நாட்டில் ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டால், நாடாளுமன்றத்தில் அரசால் அது குறித்து சம்பிரதாயபூர்வமாக அறிவிப்பது நடைமுறையாகும். ஆனால், தற்போது வன்னியில் இடம்பெறும் மனித அவலங்களை அரசு நாடாளுமன்றத்தில் அறிவிப்பதில்லை.

மாறாக தேர்தலை முன்னிட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ் மக்கள் மீது அக்கறை கொள்வதாக நீலிக்கண்ணீர் வடிக்கின்றார்.

மறுபுறமாக வன்னியில் இடம்பெயரும் மக்கள் பாரிய இன்னல்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். அதில் சிறுவர்களும் அடங்குவர்.

இடம் பெயர்ந்த மக்களை அரசு அவர்களது சொந்த இடங்களில் குடியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். மூன்று மாத காலத்துக்குள் அந்த மக்களை அரசு மீளக்குடியமர்த்துமா - எனச் சவால் விடுகின்றேன். அப்படி இல்லை என்றால் அவர்களை எப்போது அரசு குடியமர்த்தும் என்று தெரியப்படுத்த வேண்டும்.

இலங்கை அரசுக்கு எதிராகச் சர்வதேச நாடுகள் எங்கும் போராட்டங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த அபகீர்த்தியை இல்லாமல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். வன்னி மக்களின் இயல்பு வாழ்க்கை மீளத் திரும்ப அரசு காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார்.

## இலங்கை நிலை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் அப்பாவிச் சிவிலியன்களுக்கு தேவையான வசதி களை ஏற்படுத்தி கொடுக்கின்றன என அவர் குறிப்பிட்டார். (அ-சி)

## புதுமாத்தளனில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைத்துச் செல்லப்பட்டனர். செஞ்சிலு வைச் சர்வதேசக் குழுவின் பேச்சாளர் சரஸி விஜேரட்ண இத் தகவலைத் தெரிவித்தார். (அ-7)

## தென்மராட்சி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளதாகவும் பதிவுகள் தொடர்ந்து இடம்பெறுவதால் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஏற்கனவே மிருசுவில் திருக்குடும்பக்கன்னியர் மடம், கொடிகாமம் அரசினர் வித்தியாலயம் கைதடி ஆயுள்வேத மாணவர் விடுதி, கைதடி சைவச்சிறுவர் இல்லம், நாவற்குழி பனை ஆராய்ச்சி நிலையம், சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆகியவற்றில் ஆயிரத்து 762 குடும்பங்களைச் சேர்ந்த 5ஆயிரத்து 197பேர் தங்கியுள்ளதாகவும் -

செவ்வாய்க்கிழமை அழைத்துவரப்பட்டவர்கள் கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் ம.விஆகிய இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதைவிட நேற்றுப் பிற்பகல் 2மணியளவில் 4பஸ்களில் சுமார் 700 பொதுமக்கள் சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இதேவேளை சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் ஏற்கனவே தங்கியுள்ள 150 குடும் பங்களை கைதடி பனம்பொருள் ஆராய்ச்சி நிலையத்துக்கு இடம்மாற்றப்பட்டதாகதெரியவருகிறது. (அ-04-207)

## தயாமாஸ்ரர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையகம் தெரிவிக்கிறது.

இதேவேளை தயா மாஸ்டர், ஜோர்ஜ் ஆகிய இருவருக்கும் அவர்களின் உடல் நிலையைக் கருத்திற்கொண்டு நீண்ட நாள்களுக்கு முன்னரே ஓய்வு வழங்கப்பட்டுவிட்டதாக பி.பி.ஸி செய்திச்சேவைக்கு விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் சீ.புலித்தேவன் தெரிவித்துள்ளார். (04)

## பாதுகாப்பு வலயத்தில் நேற்று......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினரின் கொடூரத் தாக்குதலில் 2 ஆயிரம் வரையான மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 3 ஆயிரத்துக்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் 1,700 பேர் உயிராபத்தான நிலையில் முள்ளிவாய்க்கால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களை ஏற்றிச்செல்ல அனைத்துலக செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் ''கிறீன் ஓஷன்'' கப்பல் நேற்று முள்ளிவாய்க்கால் பகுதிக்கு வந்தது. எனினும் தொடர்ச்சியான பீரங்கித் தாக்குதல்களால் கப்பல் கரையில் இருந்து ஒரு கிலோ மீற்றர்களுக்கு அப்பால் தரித்து நின்றது. நேற்று மாலை 6.30 மணிக்கு 354 நோயாளர்கள் மட்டும் கப்பலில் ஏற்றப்பட்டனர்.

அதேவேளையில் அனைத்துலக சர்வதேசக்குழுவின் பொறுப்பதிகாரி படையினரின் தாக்குதல் அச்சம் காரணமாக கரைக்கு வரவில்லை. அவர் கப்பலி லேயே நின்றுவிட்டார்.

இந்நிலையில் முல்லைத்தீவு மேலதிக அரச அதிபர் பார்த்தீபன் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, கத்தோலிக்க அருட்தந்தை அமல்ராஜ் அடிகளார், படகில் கப்பலுக்கு சென்று மக்களின் நிலைமைகள் குறித்து எடுத்து விளக்கினர்.

உணவுக்கப்பல் நாளை வரும் என்று அதிபர் பார்த்தீபனுக்கு கப்பலில் இருந்த அனைத்துலக செஞ்சிலுவை சர்வதேசக்குழு அதிகாரி தெரிவித்தார்- என்று இணையத்தளங்கள் தெரிவித்தன. (அ)

## கப்பல் சேவை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பல் நேற்று காங்கேசன்துறைக்கு வரவில்லை என்றும் அதனால் கப்பல் சேவை இன்று நடைபெறமாட்டாது என்றும் யாழ்.சிவில் நிர்வாகப்பிரிவு வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன. (அ)

## பிரிட்டிஷ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிடையிலான யுத்தநிறுத்தம் குறித்து அவர் இந்த விஜயத்தின்போது பேசுவார் என்றும், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட தரப்பினருடன் இவர் பேச்சு நடத்துவார் என்றும் கோர்டன் பிறவுண் கூறினார்.

இதேவேளை, பிரிட்டிஷ் நாடாளுமன்றத்திற்கு முன் கடந்த இரு வாரங்களாக இலங்கையில் யுத்த நிறுத்தம் ஏற்பட வேண்டுமென்று அங்குள்ள ஆயிரக்கணக்கான தமிழர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-சி)

## பாதுகாப்பு வலய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இவ்வாறு கூறினார்.

இங்கு அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:

இராணுவத்தின் 55 ஆம் 58 ஆம் படையணியினர் பாதுகாப்பு வலயத்துக்குள் புகுந்து பொது மக்களை விடுவித்துக் கொண்டு தெற்கு பக்கம் நோக்கி முன்னேறுகின்றனர். இன்னும் 8 கிலோ மீற்றர் தூரமான நிலப்பரப்பு மட்டுமே புலிகளிடம் எஞ்சியுள்ளது. இதற்குள்தான் பிரபாகரனும் மறைந்துள்ளார் என நம்புகிறோம்.

புலிகளின் தலைவரைக் காப்பாற்றும் நோக்கில் இப்பிரதேசத்தில் சுயவிருப்பத்துடனேயே பொதுமக்கள் தங்கியுள்ளனர் என்ற பொய்ப் பிரசாரம் இப்போது முறியடிக்கப்பட்டுள்ளது.

புலிகளிடமிருந்து விடுதலை பெற அவர்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை தமிழ் மக்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டனர். கையில் கிடைத்த பொருள்களுடன் கடல் ஏரியில் மார்பளவு நீரில் இறங்கியேனும் தப்பிச் செல்ல அவர்கள் காட்டிய வேகம் இதனை நன்கு நிரூபிக்கின்றது.

கடந்த 72 மணிநேரத்தில் 81,420 சிவிலியன்களை படையினர் புலிகளிடமிருந்து விடுவித்துள்ளனர். இவர்கள் அனைவரும் இப்போது பதிவு செய்யப்பட்டுள்ளனர். இன்னும் பெரும் எண்ணிக்கையினரைப் படையினர் விரைவில் விடுவிப்பார்கள் என எதிர்பார்க்கிறோம்.

இவ்வாறு விடுவிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உணவு மற்றும் மருத்துவ உதவிகளைப் படையினர் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் ஒத்துழைப்புடன் வழங்கி வருகின்றனர் - என்றார் அமைச்சர். (அ)

## இலங்கை அரசு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, இலங்கையில் மோதல் நடக்கும் பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் இடைத்தரிப்பு முகாம்களை நோக்கி வெளிவருவதை ஒரு சாதகமான நிகழ்வு என்று வர்ணித்திருக்கின்ற அமெரிக்க அரசுத்துறை, இருந்தபோதிலும் அங்கு இன்னமும் அகப்பட்டுள்ள மக்களின் நிலை குறித்து தாம் கவலை யடைவதாகவும் தெரிவித்துள்ளது.

## வன்னியில் தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைப் பிரச்சினை தொடர்பாக விவாதிக்கவென அவசரக் கூட்டம் ஒன்று நேற்றிரவு இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி, பாதுகாப்புத்துறை அமைச்சர் எல்.கே. அந்தோனி, தேசிய பாதுகாப்புத் துறை ஆலோசகர் எம்.கே.நாராயணன், வெளியுறவுச் செயலர் சிவ்சங்கர் மேனன் ஆகியோர் உள்ளிட்டோர் பங்கேற்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் போரை நிறுத்துமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் விதத்தில் எதிர்பார்க்கப்பட்டது போன்று ஆணித்தரமான முடிவு எதுவும் எடுக்கப்படாமை குறித்து தமிழக அரசியல் வட்டாரங்கள் மிகுந்த கவலை தெரிவித்தன. இது வெறும் தேர்தல் ''ஸ்ரண்ட்'' என்று அவதானி ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

இலங்கையில் நடைபெறும் போரை நிறுத்தக் கோரி தமிழக முதல்வர் கருணாநிதி இன்று வேலை நிறுத்தம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்திருந்தார். தமிழக எதிர்க்கட்சித் தலைவரான செல்வி ஜெயலலிதாவும் உடனடியாகப் போர் நிறுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வந்தார். இந்தப் பின்னணியிலேயே பிரதமர் தலைமையிலான அவசர கூட்டம் நேற்று நடைபெற்றது.

இந்நிலையில் இலங்கை அரசை போரை நிறுத்தக் கோரும் அழுத்தம் அதிகரித்து வருவதையடுத்து அதனைத் தணிக்கும் முகமாகவும் இலங்கையின் நிலைப்பாட்டை இந்தியாவுக்கு எடுத்துரைக்குமுகமாகவும் ஜனாதிபதியின் சகோதரரும், அவரது ஆலோசகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷ விரைவில் இந்தியா செல்லவுள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஏற்கெனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இந்தியா அழைத்துப் பேச்சு நடத்தி யிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (அ)


**விற்பனைக்கு**

பாவித்த நல்ல நிலையில் உள்ள PIV Computerகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- 0779184529

**O/L DAY CLASS**

ஆரம்பம்:- 24.04.2009 வெள்ளி 8.30am

- இம்மாதக் கட்டணம் இல்லை
- சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் வகுப்பு
- பாடசாலை செல்லும் மாணவர்களும் பங்குபற்றலாம்

யூனிவேர்சல் (யா/இந்துமகளிர் கல்லூரி அருகில்)

**முக்கிய அறிவித்தல்**

இன்று 23.04.2009 வியாழக்கிழமை 2009, 2010, 2011 வகுப்புக்கள் சனி, ஞாயிறு நேர அட்டவணைப்படி நடைபெறும்.

2011 CHEMISTRY BY. MR. சிவத்திரன்
புதன் 11.30 (22.04.2009)

- DAY CLASS வழமை போல் நடைபெறும்.

NEW SCIENCE HALL JAFFNA

**பிரத்தியேக வகுப்பு**
A/L 2011 ஆரம்பம் - 25.04.2009

அளவையியல் – N.பிரதீபன்
வரலாறு – பி.ஜான்ஸி

தொடர்புகளுக்கு:-
இல.68, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
(இலுப்பையடிச் சந்தி)
தொ.பே:- 021 222 9550

**தொழிற்பயிற்சிகள்**

- Mobile Phone repairing
  Hard ware Phone Lock
  Soft ware Hard ware Repairing (காலம் 2மாதம்)
- ரேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்
  ரேடியோ, வீடியோடெக், DVD Player
  ரெலிவிசன், CD Player, Amplifier

திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்

- ஏயர் கொண்டிசனிங்

சகல குளிர்சாதனங்களும் திருத்தப்படும் முறைகள் ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.

புதிய பயிற்சிகள் ஆரம்பம்:- 25.04.2009 சனி 10am.

குறிப்பு:- தொழில் புரிவோர்களுக்காக இம்முறை சனி,ஞாயிறு பயிற்சிகள் ஆரம்பிக்கப்படும். ஏற்கனவே விண்ணப்பித்தவர்களும் தொடர்பு கொள்ளவும்.

JAFFNA TECHNICAL INSTITUTE

இல.45, மணிக்கூட்டு வீதி,
(பெருமாள் கோவில்,முன் வீதி)
யாழ்ப்பாணம் ☎ 021 222 6434

NEW ASIAN CENTER
(வர்த்தக வங்கி முன்பாக)
56/15 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0718561654, 0779254078

**Diploma in English**

- Spoken with Grammar.
- Phonetics Practices
- Computer Based Practices
- Practice Exercises
- Spoken Practices.
- Letter Writing.
- Listening..

New Batch :25.04.2009 07.30 PM

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் நேரில்,
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JPRP


## இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் -யாழ். கிளை சாரதி பதவிக்கு விண்ணப்பம் கோரல்

35 - 50வயதானவர்களாகவும், அதிபார வாகனங்கள் செலுத்தக் கூடிய சாரதி லைசன்ஸ் வைத்திருப்பவர்களாகவும், யாழ். நகரில் இருந்து இரண்டு கிலோமீற்றருக்குள் நிரந்தரமாக வசிப்பவராகவும், மும்மொழியும் ஓரளவு தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும். தமது சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் இரண்டு நற்சான்றுப் பத்திரங்களின் பிரதிகளுடன் (இதில் ஒன்று விண்ணப்பதாரி குடியிருக்கும் கிராம சேவகருடையதாக இருத்தல் வேண்டும்) இவற்றுடன் சாரதி அனுமதிப்பத்திரத்தின் பிரதியும் இணைக்கப்பட்டு 05.05.2009க்கு முன்னராக பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கிளை நிர்வாக உத்தியோகஸ்தர்
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ். கிளை,
73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட[illegible] வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.04.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.